Reg. No. M. 3066. 1938. டிசம்பர் 1.

"PAHUTHARIVU"

(REASON)

மலர் 4. இதழ் 8.

பகுத்தறிவு

அறிவை வளர்க்கும் ஓர் சிறந்த பக்ஷ வெளியீடு.

தனிப்பிரதி
விலை அணா 0—1—6

பகுத்தறிவு

பல அறிஞர்களின் அறிவியல் ஆராய்ச்சிகள், விஞ்ஞான விளக்கம், பெண்கள் முன்னேற்றம், உடற்பயிற்சி, சுகாதாரம், வைத்தியம், பாட்டுகள், நாடகங்கள், ஹாஸ்யங்கள், உலக விநோதங்கள், சிறுகதைகளும் நிறைந்து விளங்குவது

வருட சந்தா

உள்நாடு ரூ. 1—0—0. வெளிநாடு ரூ. 1—8—0.
தனிப்பிரதி 0—1—6. தனிப்பிரதி 0—2—6.

சந்தாதாரர்களுக்கு

"பகுத்தறிவு"க்கு எந்த மாதத்தில் சந்தாதாரர்களாகச் சேர்ந்தாலும் வருட ஆரம்பமாகிய மே மாதம் முதலிலிருந்து பத்திரிகைகள் அனுப்பப்படும். கொஞ்சம் பிரதிகளே கைவசமிருப்பதால் எல்லோரும் முந்திக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

"பகுத்தறிவு" சந்தாதாரர்களுக்கு முதல் வருட பைண்டு வால்யம் (12 பிரதி சேர்ந்தது) ஒரு ரூபாய்க்குக் கொடுக்கப்படும். [illegible] சார்ஜ் வேறு. சொற்பக் காப்பிகளே இருப்பதால் உடனே ஆர்டர் கொடுங்கள்.

புதிதாகச் சந்தா சேருபவர்கள் சந்தாத் தொகையை முன்னதாகச் செலுத்திவிட வேண்டும்.

சந்தாதாரர் பத்திரிகை சம்பந்தமாய்க் கடிதம் எழுதும் போது சந்தா நம்பரைக் குறிப்பிட வேண்டும்.

விஷய அட்டவணை — பக்கம்.

தமிழ்ச் சிறப்பு (கோவை சே. எஸ். எம். ஹுஸைன்) 1
நமது லக்ஷியம் (ஈ. வெ. ரா.) 3
ஜிப்ரால்டர் கோட்டை (போசிரியர் என். ஆர். மால்கனி) 11
சோஷியலிஸம் 17
பிரஞ்சு புரட்சி (ஜோசப்மெக்காபே) 25
கமால்பாஷா வரலாறு 36
புத்தக நிலையங்கள் (ஜெ. க. வேலன்) 47
கோவில் சொத்துக்கள் (பி. சிதம்பரம் பிள்ளை, பி. ஏ., பி. எல்., எம். எல். ஏ.) [illegible]4
எழுதுவதில் தேர்ச்சிப் பெறுவது எப்படி? (கல்வி ஆசிரியர் ச. மு. பிள்ளை எழுதியது) 60

பகுத்தறிவு.

அறிவை வளர்க்கும் ஓர் மாத வெளியீடு.

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என் உடையரேனும் இலர். (குறள்)

மலர் 4 ஈரோடு 1938 டிசம்பர் 1 இதழ் 8.

தமிழ்ச் சிறப்பு.

(கோவை சே. எஸ். எம். ஹஸன்)

அகவற்பா.

எங்கள் தமிழே எங்கள் தமிழே
எங்கட் குயிரா யியங்கிய தமிழே

சங்கத் தமிழே சகமெலாம் புகழும்
துங்கத் தமிழே தூய்மையாம் தமிழே

நந்தமிழ் நாட்டில் நடமிடுந் தமிழே
நாலாயிரம் வரு டந்திகழ் தமிழே

செந்தமிட் பாக்கள் செப்பிய தமிழே
எந்தமிழ்த்தாய் மகிழ்ந் தேற்றிடுந் தமிழே

வித்துவ மணிகள் விரும்பிய தமிழே
தத்துவ ஞானம் தனித்தொளிர் தமிழே

பாவலர் பாக்கள் பண்ணிய தமிழே
நாவலர் நாளும் நண்ணிய தமிழே

கம்பன் பாடிய கனிவுள தமிழே
காசினியோர் புகழ் பேசிய தமிழே

வள்ளுவர் குறளை வழங்கிய தமிழே
தெள்ளுதற்கரிய தேம்மொழி தமிழே

புத்தொளி யாண்டும் பூத்த நற்றமிழே
சத்தொளிர் பரவும் சற்குணத்தமிழே

புறநானூறும் பிறநூல் பலவும்
புவிமீதளித்த புனிதத்தமிழே

இன்சுவை அரும்பும் இன்பத்தமிழே
இங்கறிஞர்புகழ் இலக்கியத் தமிழே

தொல்காப்பியமெனும் நல் காப்பியத்தை
தொல்லுலகோர்க்களித் துளதெங்கள் தமிழே

அமிழ்தினுமினிய அருமைத்தமிழே
கமழுலகெங்கணும் கவர்ந்திடு தமிழே

முற்றிற்று.

மதங்களுக்கு ஜீவநாடியாக இருந்து வருவது பணமும், பிரசாரமுமே அல்லாமல் அவற்றின் தெய்வீகத்தன்மையோ, உயர்ந்த தத்துவமோ அறிவுக்கும், ஆராய்ச்சிக்கும் பொருந் தக்கூடிய கொள்கைகளோ என்று எந்த மதத்தையும் யாரும் சொல்லிவிட முடியாது.

ஈ. வெ. ரா.

நமது லக்ஷியம்.

(ஈ. வெ. ரா.)

சுயமரியாதை இயக்கம் இதுவரை சமூகமுன்னேற்ற இயக்கமாக இருந்ததுமாறி இப்போது பொருளாதாரத்திலும், அரசியலிலும் பிரவேசித்துவிட்டதாகவும் இதனால் இயக்கம் ஆதரவற்று அரசாங்க அடக்குமுறைக்கு ஆளாகி நசித்துப்போகுமென்றும் சொல்லுகிறார்கள். சிலர் தாங்கள் அரசாங்க ஆக்கினைக்கு தயாராயில்லை என்றும் ஆதலால் இதில் கலந்துகொள்ள முடியாது என்றும் சொல்லுகிறார்கள்.

இக்கூட்டத்தார் எல்லோருக்குள்ளும் மகிழ்ச்சி யடையத் தக்க ஒரு விஷயமிருக்கிறது. அதென்னவென்றால் அரசாங்க அடக்குமுறைக்கு ஆளாக முடியாது என்கின்ற காரணம் மாத்திரமே அல்லாமல், இக்கொள்கை விஷயத்தில் ஆட்சேபனை யிருப்பதாகக் காணப்படவில்லை என்பதே யாகும். இது எப்படியிருந்தபோதிலும் விஷயத்தை சற்று கவனித்துப் பார்ப்போம்.

சமூக முன்னேற்றம்.

சமூக முன்னேற்றமென்றால் என்ன? எந்த சமூக முன்னேற்றம்? என்பதை நாம் கவனிக்கவேண்டும். மனித சமூக முன்னேற்றம் என்பது மனிதர்கள் குளிப்பது, மதக்குறி இடுவது, புராணங்கள் படிப்பது, கோவில்களுக்கு யாத்திரை உற்சவம் செய்வது முதலாகிய இவைகள் தானா? அல்லது ஜாதி வித்தியாசம் ஒழிப்பது, சத்திரம் சாவடி கட்டுவது, பள்ளிக்கூடம் வைப்பது முதலியவைகள் தானா? இத்தமாதிரியான சமூக முன்னேற்றம் பல ஆயிர வருஷகாலமாக நடந்து வந்திருப்பதை சரித்திர வாயிலாக அறிகிறோம். இதற்காக ஆயிரக்கணக்கான மகாத்மாக்களும், முனிவர்களும், ரிஷி

களும், கடவுள் தூதர்களும் அவதாரங்களும், கடவுள் அம்சங்களும், தோன்றி ஞானோபதேசம் செய்து வண்டி வண்டியான ஆதாரங்கள் ஏற்பட்டிருப்பதும் அவைகள் கடவுள்கள் பேரால் வெளியானவை என்று சொல்லி அதில் கண்டபடி கட்டுப்பாடுகள் செய்து வைத்திருப்பதும் நாம் பார்க்கிறோம். இவற்றிற்காக உலகத்தையும், உலக மக்களையும் தேசமென்றும் மதம் என்றும், ஜாதி என்றும், வகுப்பு என்றும் பிரித்து இவற்றின் பேரால் பல ஸ்தாபனங்களையும் ஏற்படுத்தி 10-லட்சக்கணக்கான மக்கள் மதாச்சாரியார், உபதேசியார், மடாதிபதிகள் முதலிய பெயர்களால் வாழ்ந்து வருவதையும் பார்க்கின்றோம். இவ்வளவெல்லாம் இருந்தும் மனித சமூக முன்னேற்றத்திற்கு என்ன பலன் ஏற்பட்டது என்று சொல்லுங்கள் பார்க்கலாம்.

சுமார் 2000, 3000 வருஷத்திற்கு முந்திய மக்கள் சமூக நிலையை எடுத்துக்கொண்டால் அதில் இன்று என்ன மாறுதல், என்ன முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது? அந்தக்காலத்தில் இருந்த கொடுமை, எழ்மை, உழைப்பு, கஷ்டம், மனக்கவலை, அடிமைத்தனம் முதலிய எல்லாம் இன்றும் இருந்துதான் வருகின்றது. ராமர் காலத்தில், அரிச்சந்திரன் காலத்தில் இருந்துவந்த மேல்ஜாதி, கீழ்ஜாதி, பெண்ணடிமை, பிரபு-கூலிக்காரன், பிராமணன்—சண்டாளன் அடிமை-எஜமான் முதலிய கொடுமைகள் இன்றும் இருந்துதான் வருகின்றன. பெண்களுக்கு உரை போட்டு தம்பூர் போலும், தலையணை போலும் வைத்திருக்கும் கொடுமை இன்று இல்லையா? பெண்களை விற்கும் கொடுமையும், அடிமைகொள்ளும் கொடுமையும் இன்று இல்லையா? ஆணுக்கு ஒரு நீதி பெண்ணுக்கு ஒரு நீதி இன்று இல்லையா? மக்களைத் தெருவில் நடக்கவிடாமை, தொடமுடியாமை, கண்ணால் பார்க்கமுடியாமை ஆகிய மூர்க்க குணங்கள் இன்று இல்லையா? யாதொரு பாடும் படாமல் ஒரு நாளைக்கு நாலு வேளை, ஆறுவேளை, சாப்பிடுகின்ற மக்களும், ஒரு நாளைக்கு 10-மணி நேரம் 12-மணி நேரம் பாடுபட்டும் அவர்கள் பெண்டுபிள்ளைகள் இரண்டுநாளைக்கு ஒரு தரங்கூட சமயல் செய்ய யோக்கிதை இல்லாத மக்களும் இல்லையா? இவைகள் எல்லாம் மதக் கட்டளை, கடவுள் சித்தம், அரசாங்கவிதி என்பவைகளின் மீதே நடந்துவருகின்றனவா இல்லையா? இவைகளை யோசித்துப்பாருங்கள்.

மனித சமூக முன்னேற்றம் என்பதில் காணையமாயும், யோக்கியமாயும் பாடுபடுவதாய் இருந்தால் மேற்கண்டகொடுமைகளையெல்லாம் ஒழிக்கவேண்டுமா வேண்டாமா என்று யோசித்துப் பாருங்கள். மனிதசமூகம் என்றால் இதில் எந்த தேசத்தானாவது, எந்த மதத்தானாவது, எந்த சமயத்தானாவது, எந்த ஜாதியானாவது விலக்கப்பட முடியுமா என்று யோசித்துப் பாருங்கள். எல்லா தேசத்திலும், எல்லா மதத்திலும், எல்லா ஜாதியிலும் எல்லா அரசாங்கத்திலும் இந்தக் கொடுமைகளைப் பார்க்கின்றோம். சிலர் "எங்கள் மதத்தில் தீண்டாமை, பார்க்காமை முதலியவை இல்லை" என்று சொல்லக்கூடும். தீண்டாமை, பார்க்காமை என்பது ஒரு மதத்தையே அடிப்படையாகக் கொண்டதல்ல என்பதே எனது அபிப்பிராயம். தீண்டாமை என்பது ஒரு கொள்கையை அடிப்படையாகக் கொண்டது. அதென்னவென்றால் ஒருவன் பாடுபட வேண்டும், ஒருவன் பாடுபடாமல் ஊரார் உழைப்பில் வாழவேண்டும் என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டது.

உதாரணமாக பறையன் என்றால் என்ன? அவன் சதா கஷ்டமான வேலையைச் செய்ய வேண்டியவன் என்பதே. பார்ப்பான் என்றால் என்ன? அவன் சரீரத்தால் வேலைசெய்யக் கூடாதவன் என்பதே. எங்காவது பார்ப்பனன் போர்ட்டர் வேலை, மண்வெட்டி வேலை, வீதி கூட்டும் வேலை, கக்கூஸ் எடுக்கும் வேலை, வண்டி இழுக்கும் வேலை, கூலி வேலை முதலிய கஷ்டமான வேலை செய்கிறானா? பார்ப்பனப் பெண்களாவது காட்டு வேலை, தோட்ட வேலை, வீட்டுக் கூலி வேலை முதலியவைகள் செய்கின்றார்களா? இதற்காகத் தான் ஜாதி பிரிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கொள்கைகள்—அதாவது இந்த மாதிரி ஒரு ஜாதி (பல ஜனங்கள்) கஷ்டப்படுவதும், ஒரு ஜாதி (சில ஜனங்கள்) சுகப்படுவதுமான நிலை எந்த தேசத்தில் எந்த மதத்தில் எந்த ராஜரீகத்தில் இல்லை என்று யோசித்துப் பாருங்கள். இதைச் சீர்படுத்த வேண்டுமானால் எந்த விதமான சமூக முற்போக்குடன் வேலை செய்வது?

பொருளாதாரத் துறையிலும், அரசியல் துறையிலும் வேலை செய்யாமல் சமூக முற்போக்கு எப்படி ஏற்படும்? ஒரு சமூகத்துக்குப் பொருளாதாரமும் அரசியலும் அவசியமானதா அல்லவா? இந்த இரண்டையும் விட்டுவிட்டு செய்

யும் முற்போக்குக்காக நமது சுயமரியாதை இயக்கம் தேவையே இல்லை. சும்மா அலங்காரமாக, வேடிக்கையாக புராண முட்டாள் தனத்தையும், பார்ப்பனச் சூழ்ச்சியையும் பேசிக் காலங் கழிப்பது மாத்திரமே சுயமரியாதை இயக்கம் என்றால் அது அழிந்து போவதே மேலான காரியம் என்று சொல்லுவேன்.

அரசியலைப்பற்றியும், பொருளாதாரக் கொடுமையைப் பற்றியும் பேசுவதே குற்றமான காரியம் என்று சில தோழர்கள் கருதி இருப்பதாகத் தெரிகின்றது. அது வீண் பயங்காளித்தனமேயாகும். இந்த மாதிரி பயங்காளித்தனம் கொண்ட மனிதனால் ஒரு காரியமும் செய்யமுடியாது. அரசியலுக்காகவும், பொருளாதாரத்துக்காகவும், நாம் யாரையும் அடிக்கவோ, குத்தவோ, கொல்லவோ, சுடவோ, வெடிகுண்டு எறியவோ அல்லது எவ்வித பலாத்காரத்தை உபயோகிக்கவோ வேண்டுமென்று நான் சொல்ல வரவில்லை. ஜாதி வித்தியாசம் ஒழியவேண்டும் என்பதற்கு நாம் எத்தனை பேரைக் கொன்றுவிட்டோம்? யாரைச் சுட்டோம்? யார் மீது வெடிகுண்டு போட்டோம்? வெறும் நமது வாய்க்கிளர்ச்சியின் பயனாகவே—நமது அபிப்பிராயத்தை தயவு தாட்சண்யம் இல்லாமல் வெளியிட்டதின் பயனாகவே மனிதசமூகத்திற்குள் ஒரு உணர்ச்சியை உண்டாக்கி விடவில்லையா? "சுயராஜ்யம் கிடைத்த பின் தீண்டாமையை விலக்கிக் கொள்ளலாம்" என்று சொன்ன தோழர் காந்தி இரண்டு வருஷத்திற்குள் இன்று "தீண்டாமை ஒழிய 21 நாள் பட்டினி கிடக்கிறேன்" என்று சொல்லவும், "இந்தப் பட்டினி வெகு நாளைக்கு முன்னதாகவே இருந்திருக்க வேண்டும்" என்று சொல்லவும் கூட நாம் செய்து விட்டோமா இல்லையா? என்று யோசித்துப்பாருங்கள். நமது பயமற்ற, தாக்ஷண்ணியமற்ற உண்மைப் பிரசாரத்தால் பார்ப்பன ஆதிக்கம் இந்த 4, 5, வருஷத்தில் எவ்வளவு தூரம் அடக்கப் பட்டது. ஆனால் அப்பொழுதே பணக்கார ஆதிக்கத்தையும் நாம் சரியானபடி கண்டிக்காததால் பணக்கார ஆதிக்கம் தலைதூக்க ஆரம்பித்து விட்டது. இப்போது அது பார்ப்பன ஆதிக்கத்துக்கு உதவி புரிகின்றது. ஆதலால் பொருளாதாரத் துறையில் இரங்கித்தைரியமாய் தாக்ஷண்ணியமில்லாமல் அக்கொமையை வெளியாக்கினால் கண்டிப்பாய் பணக்கார ஆதிக்கத்துக்கு சாவுமணி அடிப்பதோடு பொருளாதாரக் கொடுமையும் சற்றாவது குறையும்.

பொருளாதார உயர்வு தாழ்வைப் பற்றியும், கொடுமையைப் பற்றியும், அது சம்மந்தமான அரசியலமைப்பைப் பற்றியும், நாம் பேசும்போது பயங்காளிகளுக்கும், சுயநலக்காரர்களுக்கும், ரஷியா ஞாபகம் வந்துவிடுகின்றது. இது பைத்தியக்காரத்தனமேயாகும்.

"அன்னிய அரசாங்கம் வேண்டியதில்லை; எங்கள் தேசத்தை எங்களிடம் ஒப்புவித்துவிட்டு வெளி நாட்டார் வெளியாகிவிடவேண்டும்" என்று சொல்லும் தேசியவாதிகளின் அரசியலைவிட நம்முடைய அரசியல் கொடுமையானதுமல்ல; முட்டாள்தனமானதுமல்ல.

நாம் என்ன சொல்லுகின்றோம்?

அன்னியன் என்பதற்காக யாரையும் நாட்டைவிட்டுப் போகும்படி சொல்லுவதில்லை. அன்னியர் ஆட்சி என்பதற்காக எந்த ஆட்சியையும் நாம் அழிக்க வேண்டும் என்று சொல்வதில்லை.

ஆனால் நாம் என்ன சொல்லுகிறோம்? முதலாளி தத்துவ முறைகொண்ட ஆட்சி வேண்டாம், பாடுபடும் மக்கள் அதன் பயனை அடையும்படியான முறைகொண்ட ஆட்சி வேண்டும் என்று தான் சொல்லுகிறோம். ஏனெனில் உலகத்தில் பாடுபடும் மக்கள், 100-க்கு 90 பேர்கள் இருக்கிறார்கள். சோம்பேறிகள் பாடுபடாமல் ஊரார் உழைப்பில் வாழுகின்றவர்கள் 100-க்கு 10 பேர்கள் தான் இருப்பார்கள். ஆகலால் 100-க்கு 90 பேருக்கு அனுகூலமான ஆட்சி, அவர்களுடைய நலனுக்காக அவர்களாலேயே ஆட்சி புரியக்கூடிய ஆட்சியாக இருக்கவேண்டும் என்கின்றோம். இதனால் என்ன தப்பு? இது ஏன் முடியாத காரியமாகவேண்டும்? இதை ராஜத்துவேஷம் என்றோ, வகுப்புத் துவேஷம் என்றோ சொன்னால் அதற்காக பயந்துவிடுவதா என்று கேட்கிறேன். அப்படியானால் வருவதுதான் வரட்டுமே. என்ன முழுகிப் போய்விடும்? சதா சர்வகாலம் உழைத்து சோம்பேறிகளுக்கும் போட்டுவிட்டு பட்டினியாகவே ஒரு சமூகம் உலகில் உயிர் வாழவேண்டுமானால் அந்த சமூகம் பூண்டற்றுப் போவதில் யாருக்கு என்ன சங்கடம்? சோம்பேறிகள் தானே இதற்காக வருத்தப்படவேண்டும். கசாப்புக் கடைக்காரனுக்காகவே ஆட்டுச் சமூகம் இருக்கின்றது என்

றால், அந்த ஆட்டுச் சமூகம் உலகில் அற்றுப் போவது ஆடுகளுக்கு நஷ்டமா என்று யோசித்துப் பாருங்கள்.

உதாரணமாக தஞ்சாவூர் ஜில்லாவை எடுத்துக்கொள்ளுங்கள். காவேரி ஆற்று பாசனம் முழுவதும் அங்குதான் பயன்படுகின்றது. எத்தனை ஆறுகள் ஓடுகின்றன? கொல்லைக்கு போகக்கூட இடமில்லாமல் ஜில்லாவின் பெரும்பாகம் நஞ்சையாக இருக்கிறது. ஜில்லா போர்டு, தாலூகா போர்டு, முனிசிபாலிட்டி எல்லாம் "பொது ஜனங்கள்" கையிலேயே இருக்கிறது. இருக்தும் என்ன லாபம்? சிலர் கொள்ளை அடிக்கிறார்கள், சிலர் 1000 எக்கரா, 5000 எக்கரா, 10000 எக்கரா என்பதாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். மனிதர்கள் மாத்திரமல்லாமல் கோயில், மடம் முதலியவைகளுக்கும் இதுபோலவே லட்சக்கணக்கான எக்கராவும், செல்வமும் இருக்கிறது.

அங்குள்ள சுவாமிகளுக்கும், மடாதிபதிகளுக்கும் உற்சவம், திருக்கல்யாணம், சோபனம் ஆகியவைகளுக்குக் கணக்கு வழக்கிலடங்காத பொருள் செலவழிக்கப்படுகின்றது. இவ்வளவும் இருந்து பயன் என்ன?

சிங்கப்பூர், பினாங்கு, மலேயா, மோரிசு பிஜி, கண்டி முதலிய இடங்களில் இருக்கும் கூலிகளில் அதிகமான விகிதாச்சாரம் தஞ்சாவூர் ஜில்லாக்காரர்களாகவே இருந்து வருகிறார்கள். தஞ்சாவூரில் அன்னசத்திரங்களுக்கும், சமஸ்கிருத காலேஜுகளுக்கும் குறைவில்லை என்றால் இதன் கருத்து என்ன என்று யோசித்துப் பாருங்கள். பாடுபடும் மக்கள் பறையனாய், பள்ளனாய், குடும்பனாய், சாம்பனாய் கஞ்சிக்கு வகையில்லாமல் நாட்டைவிட்டு வேறு நாட்டுக்கு போய் காயிலும், கழுதையிலும் கடையாய் பாடுபடுவதும், பாடுபடாத சோம்பேறிகள் அன்னச்சத்திரத்தில் சாப்பிட்டு சமஸ்கிருத காலேஜில் வாசிப்பதும், அங்குள்ள மிராசுதாரர்கள் தினம் தினம் நிலாவிருந்தும், சதிரும், பாட்டுக்கச்சேரியும், ஜலக்கிரீடையும் அனுபவிப்பதும், அங்குள்ள மடாதிபதிகள் ராஜபோகம் அனுபவித்துக்கொண்டிருப்பதும் சகிக்கக்கூடிய காரியமா என்று யோசித்துப்பாருங்கள்.

இதுபோலவே இன்னமும் எத்தனை ஜில்லாக்கள், எத்தனை மாகாணங்கள், எத்தனை தேசங்கள் இருந்து வருகின்

னை? இன்னும் ''நமதுசுதேச'' ராஜாக்களை எடுத்துக்கொண்டால் அவர்களின் யோக்கியதையை சொல்லவேண்டுமா? அனேக ராஜாக்கள் தங்கள் தேசத்தினுடைய மொத்த வருமானத்தில் 100-75 விகிதம் தேவடியாளுக்கும், குதிரைப் பந்தயத்துக்கும், விருந்துக்கும், மோட்டாருக்கும், வசந்தோற்சவத்திற்கும் பாழாக்குகிறார்கள்,

படிப்பு விஷயத்தில்

நமது நாட்டில் இவ்வளவு கொடுமைக்கும், அக்கிரமங்களுக்கும் அயோக்கியத்தனத்திற்கும் பணம் இருந்தும், படிப்பு விஷயத்தில் 100-க்கு 8 பேர்களே அதுவும் பார்ப்பனர்களும், பணக்காரர்களும் மாத்திரமே படிக்க முடிந்தது என்றால் இந்த ஆட்சியைப் பற்றியோ, அரசாங்கத்தைப்பற்றியோ எப்படிப் பேசாமல் இருப்பது என்று யோசித்துப்பாருங்கள். நாம் உண்மையான மனித சமூகத்திற்குப் பாடுபடுபவர்களாயிருந்தால் மேல்கண்ட அக்கிரமங்களுக்கும், கொடுமைகளுக்கும் காரண பூதங்களாயிருப்பவைகளை அழித்தே ஆகவேண்டும். அது கடவுளானாலும், மதமானாலும், அரசாங்கமானாலும் எல்லாம் ஒழிக்கப்படவேண்டியதேதான். கடவுள் பக்தர்களும் மத பக்தர்களும் எங்கள் மீது பாய்வதில் பயனில்லை. தங்கள் தங்கள் கடவுள் மீதும், மதத்தின் மீதும் பாய்ந்து அவைகளுக்குப் புத்திவரும்படி செய்யுங்கள். நாங்கள் கடவுளும், மதமும் மேல்கண்ட அயோக்கியத் தனங்களுக்காக சோம்பேறிகளால், சுயநலச் சூழ்ச்சிக்காரர்களால், மூடர்களால் கற்பிக்கப்பட்டதென்றே கருதுகின்றோம். ஆதலால் நாங்கள் அதைப்பற்றி லட்சியம் செய்வதில்லை. இன்றைய அரசியலையும், சோம்பேறிகளுக்கும் பணக்காரர்களுக்கும் காப்பளிக்க ஏற்பட்ட கவசம் என்றே கருதுகிறோம்.

ஆகையால் அவைகளையும் அடியோடு மாற்றி பாடுபடுபவர்களுக்கும் ஏழைகளுக்கும் காப்பளிக்கக்கூடியதான ஒரு ஆட்சியை நமது அரசாங்கத்தாரைக்கொண்டே அமைக்க வேண்டும் என்று கருதுகிறோம்.

இப்படிக்கருதுவதால் ஆபத்து வந்துவிடும் என்று கருதுகிறவர்கள் எங்களையே இந்த ஆபத்துக்குள்ளாக்கிவிட்டு மரி

யாதையாய் விலகி தப்பித்துக்கொள்ளட்டும். அதைப்பற்றி எங்களுக்குப் பயமில்லை. ஆனால் எங்களுக்கு முட்டுக்கட்டைப் போடவேண்டாம். உள்ளே இருந்து துரோகம் செய்ய வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறோம். இவைகளை எல்லாம் பலாத்காரம் அடிதடி, குத்து வெட்டு, ரத்தக்களரி இல்லாமல் அஹிம்சை முறையிலேயே சட்டங்கள் செய்வதின் மூலமே சாதித்துக்கொள்ள தாராளமாய் இடமிருக்கிறது என்று நாங்கள் கருதுகிறோம். எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. இதை ஒப்புக்கொள்ளுகிற எந்தஸ்தாபனத்துடனும் கலந்து வேலை செய்யத் தயாராய் இருக்கிறோம். நாங்கள் காங்கரசுக்கு எதிரிகள் என்று இந்த ஊரில் சிலர் கருதியிருப்பதாகக்கேள்விப்பட்டோம். இந்தக்கொள்கைகள் காங்கரசுடைய கொள்கைகளாய் இருந்தால் நாங்கள் காங்கரஸ்காரர்கள் தான். வருணாச்சிரமம் இருக்கவேண்டும், ஜாதி இருக்கவேண்டும், ராஜாக்கள் இருக்கவேண்டும், முதலாளிகள் இருக்க வேண்டும், மதம் வேண்டும், வேதம் புராணம் இதிகாசம் இருக்கவேண்டும், இன்றைக்கு இருக்கிறதெல்லாம் இருக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டு இவைகளையெல்லாம் பலப்படுத்தி—நிலைக்க வைக்கவேண்டி 'வெள்ளைக்காரன் மாத்திரம் போக வேண்டும்'' என்கின்ற காங்கரசோ, சுயராஜ்யமோ, தேசியமோ, காந்தீயமோ சுயமரியாதை இயக்கத்திற்கு வைரியேயாகும். சுயமரியாதை இயக்கத்தார்களால் அழிக்கப்பட வேண்டியவைகளில் இந்த காங்கரசும், காந்தீயமும் ஒன்றாகும். சுயமரியாதை இயக்கம் தமிழ் நாட்டில் மாத்திரம் இருப்பதாய்க்கருதுகிறீர்கள். அது தவறு. உலகில் எங்கும், எந்த மூலை முடுக்குகளிலும் இருக்கின்றது. இந்தியாவில் மலையாளம், ஆந்திரம் வங்காளம், பம்பாய், பஞ்சாப், ஐக்கிய மாகாணம் முதலிய அனேக மாகாணங்களில் இருக்கிறது. அவைகளைப் பார்க்கும்போது நமது சு. ம. இயக்கம் மிகவும் வேகமற்ற சக்திகுறைவான தன்மையில் இருக்கிறது என்று தான் சொல்லவேண்டும். நாம் யாரையும் பார்த்து காப்பி அடிக்கிறவர்கள் அல்ல. நமது தகுதிக்கு நிலைமைக்கு ஏற்ற அளவில் இருக்கிறோம். பலாத்காரத் தன்மையையோ இரகசிய முறையையோ நாம் அடியோடு வெறுக்கிறோம். நமது கொள்கை நியாயமும், நேர்மையும் ஆனதால் நமக்கு பலாத்காரமும்; ரகசியமும் வேண்டாம்.

தோழர்களே நாம் தைரியமாயும், நேர்மையாயும்; ஒற்றுமையாயும், கவலையாயும் வேலை செய்தோமேயானால் நம் ஆயுளிலேயே நமது இச்சைபூர்த்தியாவதைக் காணலாம்.

ஜிப்ரால்டர் கோட்டை

பிரிட்டிஷார் ஜீவநாடி.

(பேராசிரியர் என். ஆர். மால்கனி)

* பிரிட்டிஷாருடைய படை பலத்தைப்பற்றிப் பேச வேண்டுமானால், அதனுடைய கப்பற்படையைப்பற்றித்தான் பேச வேண்டும். உலகத்தில் பிரிட்டன் இன்று ஆதிக்கங் கொண்டிருப்பதற்கு அதன் கப்பற்படையின் பலமே மூல காரணம்.

* பிரிட்டிஷ் கப்பற்படை ஸ்தலங்கள் முக்கியமாக மேற்கே ஒன்று; கிழக்கே ஒன்று. மேற்கில் உள்ளது ஜிப்ரால்டர்; கிழக்கில் உள்ளது சிங்கப்பூர்.

*ஜிப்ரால்டர் என்பது ஒரு சிறு குன்று கடல் குடைந்து ஐரோப்பாவையும் ஆப்ரிக்காவையும் பிரிக்கின்ற ஸ்தலம். இது ஒரு வாசற்படிபோல. கப்பல்கள் இதன் வழியாகத்தான் போகமுடியும்; வரமுடியும். இந்த முக்கியமான இடம் யாருக்கு உரியது, அதைப் பிரிட்டிஷார் எப்படிக் கைப்பற்றினர், அதை வைத்துக்கொண்டு உலகத்தையே ஆள முடிவதெப்படி என்கிற செய்திகள் மிக ருசிகரம்.

ஐரோப்பாவின் முக்கியமான தேசங்களெல்லாம் மத்தியதரைக் கடலைச் சூழ்ந்திருக்கின்றன. ஆதலின் மற்றெல்லாக் கடல்களிலும் மத்தியதரைக் கடலே மிக மிகப் பிரபல்யமானது.

மத்தியதரைக் கடலுக்குப் போக வேண்டுமானால் ஜிப்ரால்டர் வழியாகத்தான் போகவேண்டும். ஜிப்ரால்டர் என்பது ஒரு சிறு மலைக் குன்று.

ஆகையால், மத்தியதரைக் கடலுக்குள் பிரவேசிப்பதற்

காவுள்ள வாசலுக்கு ஜிப்ரால்டர் தான் பாதுகாப்பாய் விளங்குகின்றது.

இரண்டாவதாக, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்காகவுள்ள பாதைகளைப் பாதுகாக்கும் பொருட்டு, பிரிட்டனுக்கு அப்பால் பிரிட்டிஷார் கட்டி வைத்துள்ள கோட்டைகளில் ஜிப்ரால்டரிலுள்ளதுதான் மிகவும் பலம் பொருந்தியது.

ஜிப்ரால்டர் மலைக் குன்று அப்படியொன்றும் விசேஷமானதல்ல. அதிலுள்ள சிறப்பெல்லாம், சமவெளியின் வட பாகத்தில் திடீரென்று ஒரேயடியாக 1400 அடி உயரம் உயர்ந்திருப்பது தான். காய்கறி வகைகளுக்குரிய பயிர் பச்சைகள் வளர முடியாத இடம். ஸ்பெயினிலிருந்தும் ஸ்பெயினைச் சேர்ந்த மொராக்கோவிலிருந்தும் அன்றாட உணவுப் பொருள்கள் வந்துகொண்டிருக்காவிடில், இங்கு வசிக்கின்ற சொற்ப ஜனங்கள்கூட நீண்ட நாட்கள் உயிர்வாழ முடியாது.

ஜிப்ரால்டர் ஒரு கோடியிலிருந்து இன்னோர் கோடிக்கு இரண்டே இரண்டு மைல் நீளமுடையது தான். மலையின் மேற்கே ஒரு ரோடு, கிழக்கே ஒரு ரோடு, இந்த இரண்டு ரோடுகளைத்தவிர பெரும் ரஸ்தாவே கிடையாது. மலைக்கு மேற்கே உள்ள ரோட்டுக்கு யூரோப்பா ரோடு என்று பெயர்; கிழக்கேயுள்ள ரோட்டுக்கு ஹார்பெர்ட் மைக்கல் என்று பெயர். இந்த இரண்டு முக்கிய ரோடுகளையும் இரண்டுமணி நேரத்திற்குள்ளாக நடந்துசென்று ஒரு கோடியிலிருந்து இன்னோர் கோடிக்குப் போய்விடலாம்.

மலைமீதிருந்து பார்த்தால் மத்தியதரைக் கடலிலிருந்து அட்லாண்டிக் மஹாசமுத்திரத்துக்குக் கப்பல்கள் போவதையும் வருவதையும் பார்க்கலாம்; பார்ப்பதற்கு வெகு அழகாயிருக்கும்.

ஜிப்ரால்டரில் இரண்டு நாட்கள் தங்கினால் போதும்; அங்குள்ள வீதிகள் சந்துகள் எல்லாவற்றிலும் நடந்துபார்த்து விடலாம்; எல்லாக் காட்சிகளையும் கண்டு விடலாம்; கிட்டத்தட்ட 15,000 ஜிப்ரால்டர் வாசிகளையும் ஒரு சனிக்கிழமை இரவு 'பெரிய வீதி'யில் சந்தித்தும் விடலாம்!

காட்சிக்காக உலகத்தைச் சுற்றி வரும் பிரயாணிக்கு ஜிப்ரால்டர் ஒரு காட்சி சாலையல்ல; அங்கு 100 பேர்களுக்கு

மேல் இந்தியர்கள் இருக்கிறார்கள். வேடிக்கைச் சாமான்களையோ, ஜப்பானியப் பட்டுத் துணிகளையோ, பாரிஸ் வாசனைத் திரவியங்களையோ வைத்துக்கொண்டிருப்பவர்கள். என்றாலும் இது இந்தியர்கட்குப் பிடிக்காத ஸ்தலம்.

ஜிப்ரால்டர் பொழுதுபோக்குவதற்குரிய வசதிகளற்ற மந்தகரமான ஸ்தலந்தான்; எனினும் மிகவும் முக்கியமான இடம். மிக மிகச் சொற்பமான சிப்பாய்கள் தான் இங்குளர், ஆனால் ஏராளமான கப்பலோட்டிகள் இருக்கின்றார்கள்.

மலையை ஒரு பார்வை பார்த்துவிட்டு கீழே உள்ள குடாக் கடலை (கடல் குடைந்த இடம்) அடுத்த விநாடி பார்த்தால், அப்போதுதான் தெரியும்; இச்சிறிய மலைக்குன்று ஒரு பிரம்மாண்டமான கோட்டை யென்பதும், கடல் குடைந்த குடாக்கடல் பிரிட்டிஷாருடைய கப்பற் படைக்குரிய தென்பதும்!

பூர்வ சரித்திரம்

கிறிஸ்து காலத்துக்குப் பின்னர் 711-வது ஆண்டில் மூரிஷ் தலைவர் டாரீக் இப்ன் செயாத் இம்மலைப் பிரதேசத்தில் இறங்கி ஒரு கோட்டை கட்டினார். அப்போது இம்மலைக்கு ஜிபால் டாரீக் என்று பெயர். டாரீக் கட்டின கோட்டைக்கு மூரிஷ் மாளிகை யென்று பெயர். அக்கோட்டையின் சின்னங்கள் இப்போதும் காணப்படுகின்றன. இன்றுள்ள கோபுரமும் மூரிஷாருடையதுதான்.

அந்த மூரிஷ் கோட்டை எத்தனையோ முற்றுகைகளுக்கெல்லாம் உள்ளாயிற்று. முதல் முற்றுகை 1309-ம் ஆண்டில் ஏற்பட்டது. ஆனால் 1462-ம் வருஷத்தில் மூர்கள் கையிலிருந்ததை ஸ்பானியர்கள் கைப்பற்றிக்கொண்டனர்.

1552-ல் ஐந்தாவது சார்லஸ் அதைச் சுற்றி ஒரு சுவர் எழுப்பினார். ஆனால் 1704-ஜூலை 24-ம் தேதி ஏற்பட்ட 3-நாள் முற்றுகை (இது 11-வது முறை முற்றுகை)யில் தான் ஜிப்ரால்டர் கைவசப்பட்டது.

இராணி ஆன் காலத்தில் ஜிப்ரால்டர் ஒரு இலவசத்துறைமுகமாக ஆயிற்று. ஆனால் 1713-ல் உட்ரெக்ட் ஒப்பந்தப்

படி அது கிரேட் பிரிட்டனுக்குக் கொடுக்கப்பட்டது. இதன் பின்னரும் 1779—1783-ம் ஆண்டுகளில் ஸ்பானியரும் பிரெஞ்சுக்காரரும் சேர்ந்து முற்றுகையிட்டுத் தாக்கினார்கள். ஜெனரல் எலியட் திறமையுடன் சமாளித்துக் கொண்டார். அவர் போட்டுவைத்த யோசனைகளின் படியே தான் இன்று ஜிப்ரால்டர் அபிவிருத்தியடைந்திருக்கிறது.

ஜிப்ரால்டரில் இப்போது பல 'காலரிகள்' இருக்கின்றன. இவைகள் யாவும் 1790ம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டவை. இவைகளில் ஏராளமான மண்டபங்களும் பல அறைகளும் 1000 அடி நீளத்துக்கு இருக்கின்றன; குடாக் கடலை இவைகள் காத்தவண்ணமாயிருக்கின்றன! மறுகரையில் ஸ்பெயின் மலைகளும் நகரங்களும் உள்ளன!

மகா யுத்தம் நடந்ததல்லவா, அப்போது ஜிப்ரால்டர் சர்வ ஜாக்கிரதையுடன் பாதுகாக்கப்பட்டது. இந்த ஜிப்ரால்டரை தவிற பிரிட்டிஷாருக்கு ஐரோப்பாவின் பிரதானநிலபாகத்தில்வேறு இடமே கிடையாது.

இந்த நெருக்கடியில்

பிரெஞ்சு மொராக்கோவின் பிரதான துறைமுகஸ்தலம் 'காஸப் பிளான்கா' என்பதாகும். சென்ற செப்டம்பர் 28-ம் தேதி விளக்குகளை யெல்லாம் அணைத்துவிட்டு அங்கு வெடிகுண்டு ஒத்திகை நடந்தது.

ஜிப்ரால்டரில் செப்டம்பர் 30-ம் தேதி வண்டிப் போக்குவரத்துகள் நிறுத்தப்பட்டு, விளக்குகள் அணைக்கப்பட்டு, விசேஷமான ஒளி வீசும் சர்ச் லைட்டுகளால் ஜிப்ரால்டர் கோட்டை மூழுதும் இரண்டுமுறை பார்வையிடப்பட்டு மிகுந்த எச்சரிக்கையோடிருந்தார்கள்.

தவிர விமானங்களிலிருந்து வீசப்படும் குண்டுகளைச் சமாளித்து அவ்விமானங்களைத் தாக்குவதற்குரிய மார்க்கங்கள், பலாத்காரமற்ற தற்காப்பு முறைகள் யாவும் நகர் முழுதும் பரப்பப்பட்டன. வாலண்டியர்களாய்ச் சேர விரும்புவோர் மனு போடும்படி அழைக்கப்பட்டனர்.

சில மர்மங்கள்

ஜிப்ரால்டரில் ஒரு குகை யிருக்கின்றது. இது ஆப்ரிக்காவின் சமுத்திரக்கரைக்குக் கொண்டுபோய் விடுவதாகச்

சொல்லப்படுகிறது. இப்பாதை வழி சென்ற இரண்டு பிரிட்டிஷ் அதிகாரிகள் தம் உயிரை யிழந்தனர்.

சமுத்திர மார்க்கமாய்க் கிழக்கிலிருந்து மேற்கேயோ அல்லது மேற்கிலிருந்து கிழக்கேயோ போகவேண்டுமானால், எதன்வழியாக போகவேண்டுமோ அந்த வழியை ஜிப்ரால்டர் மலை அடக்கியாளுகிறது. வடக்கிலும் தெற்கிலுமுள்ள நிலங்களுக்கு அது கம்பீரமாய் நிற்கிறது. இரண்டு பெரியசமுத்திரங்களும், இரண்டு பெரிய கண்டங்களும் பிரிகின்ற இடத்தில் ஜிப்ரால்டர்கோட்டை அமைந்துகொண்டு சகலவற்றையும் அடக்கியாள விருக்கின்றது.

சென்ற செப்டெம்பரில் இப்பேர்ப்பட்ட ஜிப்ரால்டருக்கும் ஒரு ஆபத்து நேரிட விருந்தது. எவ்வாறெனில், ஜிப்ரால்டருக்கு வடக்கே, ஒரு மைல் தூரத்துக்குள்ளாகவே "பேயின் நாக்கு" என வழங்கப்படும்—ஸ்பானியர் நகரம் லா லிங்கா இருக்கின்றன. இந்நகரம் தான் ஜிப்ரால்டருக்கு சிப்பந்தி வேலையாட்களையும் உணவுப் பொருட்களையும் சப்ளை செய்கிறது. லா லிங்காவுக்கும் அப்பால் வடக்கே இரண்டு மைல் தூரத்தில் சான் ரோக் என்கிற ஸ்பானியர் நகரம் இருக்கின்றது. குடாக்கடலின் அக்கரையில் அல்ஜிராஸ் எனும் நகரம் இருக்கிறது. ஸ்பெயினில் பிரவேசித்த போது பிராங்கோ இதைப் பீரங்கியால் தகர்த்தார். இதற்கு 18 மைலுக்கு மேற்கே, மூரிஷ் நகரம் ஒன்று டாரியா என்றிருக்கிறது. இதிலிருந்து டாரிப் (தீர்வை) எனும் ஆங்கிலச் சொல் வந்தது. ஜிப்ரால்டரிலிருந்து 18-வது மைல் தூரத்தில், ஸ்பானிய மொராக்கோவில் கேவ்டா எனும் ஊர் இருக்கிறது.

மேலே சொல்லப்பட்ட எல்லா ஊர்களும் சிற்றூர்களும் மிக நெருக்கமாகக் கடலைச் சுற்றியிருப்பதால், ஒன்றுக்கொன்று பார்த்து வந்தனம் தெரிவித்துக்கொள்ளலாம். ஆனால் செப்டெம்பர் கடைசி வாரத்தில் இவைகள் யாவும் ஒன்றோடொன்று சேர்ந்திருக்கின்றவை போல அவ்வளவு நெருக்கமாகிவிட்டன. ஜிப்ரால்டரைப் போலவே இவைகளும் மலைக் குன்றுகளால் பாதுகாக்கப்படுபவை. சாதாரணத் துப்பாக்கிகள் பாயக்கூடிய தூரத்தில் தான்—ஜிப்ரால்டர் உட்பட இருக்கின்றன. நாலா பக்கங்களிலுமுள்ள ஒவ்வொன்றும் ஜிப்ரால்டரை நோக்கிக் குறி வைத்துக்கொண்

டிருக்கின்றன. ஜிப்ரால்டரும் நான்கு திசைகளையும் நோக்கிக் குறிவைத்த வண்ணம் தயாராயிருந்துகொண்டிருக்கின்றது.

யுத்தம் ஆரம்பித்துவிட்ட தென்பதற்கு அறிகுறி ஏது வென்றால் இத்தனை நகரங்களும், ஜிப்ரால்டர் உட்பட தூள் தூளாய் நாசமாகவேண்டும்.

ஸ்பானியர் பயத்துடனும் ஆத்திரத்துடனும் ஜிப்ரால்டரைப் பார்த்தவண்ணமிருக்கிறனர். இது அவர்களுக்குச் சொந்தமாயிருந்தது. அவர்களுக்குத்தான் இது சொந்தமாயிருக்கவேண்டியது. அவர்களைத் தவிர இது வேறு யாருக்குமே சொந்தமாயிருக்கவுங்கூடாது. அந்தக்காலம் எப்போது வரும்—

ஸ்பெயினும் ஸ்பெயினுக்குச் சொந்தமான மொராக்கோவுங்கொண்ட அபிப்பிராயபேதத்தினால் இது பிரிட்டிஷாருக்கு சொந்தமாய்ப் போகும்படி நேரிட்டது ஸ்பானியருடைய இருதயத்தில் தைத்திருக்கின்ற ஈட்டிமாதிரி.

ஜிப்ரால்டர் ஒரு பிரிட்டிஷ் திமிங்கிலம் போலவும், அது குறுகலான ஜலசந்தியில் படுத்துக்கொண்டு, தலையிலிருந்தும கண்ணிலிருந்தும், வாலிலிருந்தும், இரு புறங்களிலிருந்தும் துப்பாக்கிகளை விட்டுக்கொண்டிருப்பது போலவும் ஒரு போஸ்ட் கார்டு இருக்கிறது. ஜிப்ரால்டர் மீது அவ்வளவு ஆத்திரம்!

ஜிப்ரால்டர் மலைமீது பிரிட்டிஷ் பிரஜைகள் போகலாம்; அவர்கள் கூட அங்கு மிங்கும் திரும்பிப் பார்க்காமல் நேராகப் போகவேண்டும். ஏனெனில் இயந்திரத் துப்பாக்கிகள் ஆங்காங்கு தெரியாமல் வைக்கப்பட்டிருக்கின்றன. பல வருஷங்களுக்கு உணவுப் பொருள்கள் சேமித்து வைக்கப்பட்டிருக்கிறது. மழை நீரைத் தேக்கி வைக்கக்கூடிய 38 ஏக்கர் விஸ்தீரண நிலமிருக்கிறது. 90 லட்சம் காலன் தண்ணீரை நிரப்பி வைத்திருக்கக்கூடிய ரெசர்வாயர்களிருக்கின்றன. இவைகட்கும் அப்பால் பிரிட்டிஷ் கப்பற்படை உள்ளே வருவதும் வெளியே போவதுமாயிருக்கும். இதுதான் பிரிட்டிஷ் கப்பற்படையின் பலம் பொருந்திய ஸ்தலம். இதெல்லாம் வரும் போராட்டத்துக்கே அறிகுறி; இப்போது அல்லது அடுத்தாற்போல் இந்த யுத்தம் நடந்தே ஆகவேண்டும்.

சோஷியலிஸம்.

சோஷியலிஸம் என்பது ஒரு சமூக வாழ்க்கையின் முறை. நாம் இப்பொழுது கைக்கொண்டிருக்கும் முதலாளித்துவ சமூக முறையில் உயர்வு, தாழ்வு, உறுதியின்மை, தாங்க முடியாத கஷ்டம், பசியின் கொடுமை, மனக்கவலை முதலியவைகள் பொறுக்கமுடியாத அளவுக்கு வந்துவிட்டதால் இந்த முதலாளித்துவ வாழ்க்கை முறையை விட்டு வேறொரு முறையைக் கைக்கொண்டு, உயர்வு, தாழ்வு, உறுதியின்மை, முதலியவைகளில்லாத ஒரு புதிய சமூகத்தை ஏற்படுத்த ஏழை ஜனங்கள் ஆசைப்படுகிறார்கள். உற்பத்திச் சாதனங்களாகிய பூமி, இயந்திரங்கள் முதலியவைகள் ஒரு சில முதலாளிகளின் கையில் இருப்பதால் அவர்கள் அவைகளைச் சுய லாபத்திற்காக மாத்திரம் உபயோகப்படுத்துகிறார்களே தவிர சமூகப் பொது லாபங்களுக்காக உபயோகிப்பதில்லை. இவ்விதமாய் முதலாளிகள் உற்பத்திச் சாதனங்களையெல்லாம் அவர்களின் கையில் வைத்துக்கொண்டதாலும் ஏழைகள் பசிக்குப் பயந்து மிகவும் குறைந்த கூலிக்கு வேலை செய்ய முன் வருவதாலும் முதலாளிகள் என்று சொல்லப்படும் ஒரு சிறிய கூட்டத்தாரிடம் செல்வம் எல்லாம் குவிந்து விட்டன.

முதலாளித்துவ சமூகமும் சோஷியலிஸ்டு சமூகமும்

இப்படிச் செல்வத்தையெல்லாம் குவித்து வைத்திருக்கும் முதலாளிகளும், ஜமீந்தார்களும், அவர்களுடைய மெஷின்களை ஓட்டவும் நிலங்களைச் சாகுபடி செய்யவும் எத்தனை ஆட்கள் வேண்டுமோ, அத்தனை ஆட்களை மாத்திரம் வைத்துக்கொண்டு மீதி இருக்கும் கோடிக்கணக்கான ஜனங்களைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. மேலும் ஏழைகள் முதலாளிகளுக்கு உபயோகப்படும் வரையில்தான் முதலாளிகள் அவர்களுக்கு அரைவயிற்றுக் கஞ்சியாயினும் கொடுத்து வருகிறார்கள். வேலை செய்யச் சக்தியில்லாமல் போய்விட்

டால் அவர்களைப்பற்றி முதலாளிகள் கவலைப்படுவதில்லை. இது தனிப்பட்ட முதலாளிகளின் குறையல்ல. முதலாளித்வ சமூகத்தில் இப்படித்தான் இருக்கும். இது சமூக அமைப்பின் குறைவே தவிர தனிப்பட்டவர்களின் குறையல்ல. இந்தக் கெடுதிகளையும், தீங்குகளையும் நீக்க சோஷியலிஸ்டு சமூகம் ஏற்படவேண்டியது சரித்திர அவசியம். சோஷியலிஸ்டு சமூகத்தைச் சர்க்கார் அதிகாரத்தைக் கொண்டே நிலைநாட்ட முடியும். சோஷியலிஸ்டு அரசாங்கம் எல்லா உற்பத்திச் சாதனங்களையும் கைக்கொண்டு, எல்லா ஜனங்களுக்கும் வயிறு நிறையச் சாப்பாடும் மற்றும் அவசியமான பொருள்களும் கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும். நிலம், இயந்திரம் முதலிய உற்பத்திச் சாதனங்கள் ஒரு தனி நபருக்கும் சொந்தமாக இரா. மனிதன் மனிதனைக் கொள்ளையடிக்க முடியாது. சமூகத்தில் யாதொரு விதமான உயர்வு தாழ்வும் இரா. எல்லாரும், எல்லாருக்காகவும் பாடு படுவர். இப்படி உற்பத்தி செய்யப்படும் வஸ்துகள் உலகத்திலுள்ளவர்கள் எல்லோருக்கும் பிரித்துக் கொடுக்கப்படும். உயர்ந்தஜாதி, தாழ்ந்த ஜாதி, உயர்ந்தவம்சம், தாழ்ந்தவம்சம், ஏழை பணக்காரன் என்ற வித்தியாசங்கள் இருக்கவே இரா.

எல்லோருக்கும் அவரவர்களால் இயன்றவரை பாடுபட வேண்டும். எல்லோருக்கும் அவர்களுடைய தேவைக்குத் தகுந்தபடி பொருள் கொடுக்கப்படும்.

இவ்விதமாய் உற்பத்திச் சாதனங்களையெல்லாம் சர்க்கார் கைக்கொண்டு, எல்லா ஜனங்களின் பிரயாசையைக்கொண்டு உற்பத்திசெய்து எல்லோருக்கும் சமமாகப் பங்கிட்டுக் கொடுக்கும் உயர்வு தாழ்வு இல்லாத வாழ்க்கையின் முறைக்குத்தான் 'சோஷியலிஸம்' என்று சொல்லுவது.

சோஷியலிஸத்தின் அவசியம்

நாம் சோஷியலிஸத்தை விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், அது வந்தே தீரும். அது அப்படி வருவது நல்லதா?

உலகத்தின் ஏழைமக்கள் படாத அவஸ்தைப்படுவதை நாம் பார்க்கிறோம். கோடிக் கணக்கான மக்களுக்கு ஒரு நேரம்கூட வயிறு நிறையச் சாப்பாடு கிடையாது. ஒரு பக்கம் பசியும், வியாதியும் அவர்களைக் கொல்ல, மற்றொரு பக்கம் கடன்காரர்களின் ஹிம்சையும், முதலாளிகளின் அக்கிரமங்

களும் அவர்களுடைய உயிர்களை வதைக்கின்றன. உண்ண உணவு கிடையாது; உடுக்க உடைகிடையாது; வசிக்க வீடு கிடையாது. வேலை செய்தும் ஏழைமக்கள் இவ்வாறு திண்டாடுகிறார்கள். வேலை கிடைக்காமல் பசியின் கொடுமையால் வருந்தும் ஏழை மக்களின் கஷ்டங்களைக் கண்கொண்டு பார்க்க முடியவில்லை. நாம் ஜனங்களின் கஷ்டங்களைப் பார்த்துப் பார்த்து நம் பார்வைகளின் கூர்மை மங்கிவிட்டது. சற்று உணர்ச்சியுள்ளவர்களின் மனம் இந்தக் கொடுமைகளை பார்த்த உடன் துள்ளுகிறது. விவரிக்கமுடியாத வியாதிகளின் கொடுமையும், பசியின் வாட்டுதலும், மனைவிமக்களின் கவலைகளும், இன்ன விதமாக வருந்துகின்றனவென்று கூற முடியாது. இப்படிக் கஷ்டப்படும் ஏழைகளைப் பார்த்த உடன் இந்தக் கொடுமைகளை நீக்கமுடியுமா என்ற கேள்வி உணர்ச்சியுள்ள ஒவ்வொருவன் உள்ளத்திலும் உதிக்கிறது. தன்னுடைய கஷ்டங்களை நீக்கவேண்டுமென்றும் பிறருக்காக பாடுபட வேண்டுமென்றும் எண்ணும் ஒவ்வொருவரும் இந்த அபிப்பிராயங்களை நீக்க என்ன செய்ய வேண்டுமென்று யோசிக்கிறார்கள்.

மூட நம்பிக்கை

ஏழைகளுக்கு ஓவனைப்போன்ற அநேகர் தங்களால் இயன்ற உதவி செய்தும், மற்ற பணக்காரர்களிடத்திலிருந்து பணம் வசூல்செய்து உதவு செய்யவும் முயன்றார்கள். ஆனால் கோடிக்கணக்கான ஜனங்களின் கஷ்டங்களை நீக்க எவ்வளவு பணமும் மற்றவசதிகளும் வேண்டுமோ அதில் லக்ஷத்தில் ஒரு பாகங்கூட கிடைக்கவில்லை. 'உணர்ந்தவன் செத்தான்' என்ற பழமொழியின்படி உணர்ந்த சிலர் அவர்களிடத்திலுள்ள எல்லாப்பொருள்களையும் கொடுத்துவிட்டு, எந்தத் துன்பங்களை நீக்க அவர்கள் முயன்றார்களோ அந்தத் துன்பங்களுக்கு அவர்களே ஆளானார்கள்.

ஏன்? பணமுள்ளவர்கள் கேட்டதற்காகவோ, மற்றவர்களின் கஷ்டங்களை யுணர்ந்தோ அவர்களுடைய சொத்தையெல்லாம் கொடுக்கவில்லை. கொடுக்கவும் மாட்டார்கள். சொத்துப் பெருகப்பெருக ஆசையும்பெருகும். கஷ்டங்களைக் காணக் காண மனங்கல்லாய்விடும். தாங்கள் அதிர்ஷ்டவசமாய் ஒரு பணக்காரன் வீட்டில் பிறந்ததையோ, அல்லது மற்றவர்களை ஏமாற்ற முடிந்ததையோ, தன்னுடைய புத்தியையும் சாமர்த்

நியத்தையும் கொண்டு அடைந்ததென்று எண்ணியும் தான் இதற்கு முந்திய ஜன்மத்தில் செய்த கருமத்தின் பலன் என்ற மூடநம்பிக்கையைக் கொண்டும் ஏழைமக்கள் படும் கஷ்டங்களைச் சற்றும் கவனிப்பதில்லை.

சோஷியலிஸமும் உற்பத்தியும்

(1) சோஷியலிஸம் ஏற்பட்டால் உற்பத்தி எவ்விதத்தில் அதிகப்படும்?

(2) சோஷியலிஸ்டு சர்க்கார் எல்லோருக்கும் தேவையான வசதிகளைக் கொடுத்தால் ஜனங்கள் அதிக முயற்சியுடன் பாடுபடாமல் உற்பத்தி குறைந்து விடாதா? மேற்கண்ட இரண்டு கேள்விகளுக்குப் பதிலளிப்போம்.

உலகம் உண்டு உய்ய வழி.

முதலாளித்துவ முறையைவிட சோஷியலிஸ்டு முறையில் அவசியம் உற்பத்தி அதிகப்படும். முதலாவதாக வேளாண்மையை எடுத்துக் கொள்வோம். நிலங்களைத் தனியாகப் பிரித்து வரப்புகள் போட்டுக் கொள்வதினால் ஏராளமான சேதம் ஏற்படுகிறது. தவிர தற்கால விஞ்ஞான முறைகளுக்கு ஒப்ப வேளாண்மை செய்ய முடிவதில்லை. தற்காலத்தில் சிறு சிறு கழனிகளை ஏரைக் கொண்டும், மாடுகளைக் கொண்டும் மனித பலத்தைக் கொண்டும் உழுவதால் அதிக ஆழம் பூமியின் பரப்பைக் கிளற முடிவதில்லை. ஆகவே அரையடி ஆழத்திற்குக் கீழிருக்கும் பூமியின் சத்தை உபயோகப்படுத்த வகையில்லை, பல்லாயிர வருஷங்களாகப் பூமியின் மேலிருக்கும் அரையடி மண் தான் உற்பத்தி செய்திருக்கிறதே தவிர, அதற்கு அடியில் இருக்கிற மண் இதுவரை உற்பத்தி செய்ததே யில்லை. பூமியின் மேற்பரப்பு வருஷந் தவறாது உற்பத்தி செய்து சத்தற்றுப் போய்விட்டது.

பூமிகளையெல்லாம் அரசாங்கம் தன் வசப்படுத்தி வரப்புகளை யெல்லாம் வெட்டி அதன் செழிப்பான மண்ணை உபயோகப்படுத்தி "இயந்திரக்கலப்பை"களைக் கொண்டு நவீன முறையில் பூமியை ஆழமாக உழுது அடியிற்கிடக்கும் சாரம் பொருந்திய மண்ணை உபயோகப்படுத்திக் கூட்டு முறையைக் கொண்டு உற்பத்தி செய்தால் ஒன்றுக்குப் பத்தாகப் பலன் கிடைக்கும் என்பது திண்ணம். இதே விதமாக

சோஷியலிஸம்

பூமிக்குள் இருக்கும் உலோகங்களை யெல்லாம் சர்க்காரே தேர்ச்சி பெற்றவர்களைக் கொண்டு வெளியாக்கினால் தேசத்தின செல்வம கட்டாயமாக அதிகப்படும். மற்றும் தேசத்திலுள்ள எல்லா நிலங்களையும், தரவாரி'பிரித்து எந்தெந்த நிலங்களில் எவ்வெப்பயிர்கள் செழிக்கக்கூடுமோ அவைகளைப் பயிரிட்டால் உலகத்திலுள்ள ஜனத்தொகையைப்போல் இன்னும் நூறுமடங்கு ஜனத்தொகைக்குப் 'போதும்! போதும்' என்று சலிக்கும் வரையில் ஊட்டலாம்.

சோஷியலிஸ்டு அரசாங்கத்தில் எப்படி?

இரண்டாவதாகக் கைத்தொழிலை யெடுத்துக்கொள்வோம். தற்சமயம், முதலாளிகள் சிறிய சிறிய தொழிற்சாலைகளை வைத்துக்கொண்டு அவைகளில் கோடிக்கணக்கான ஏழை மக்களை வேலைக்கமர்த்தி அவர்களின் உழைப்பைச் சுரண்டி உற்பத்தி செய்து ஒருவரோடுருவர் போட்டி போட்டுக்கொள்ளுகிறார்கள். ஏழை ஜனங்களிடத்தில் உற்பத்திப்பொருள்களை வாங்கப்பணமில்லாததால் இவ்விதமாகக் கஷ்டப்பட்டு உற்பத்தி செய்யப்படும் சில பொருள்கள் கூட செலவாக மார்க்கமில்லாமல் ஏழைகளும் பணக்காரர்களும் திண்டாடுகிறார்கள்.

சோஷியலிஸ்டு அரசாங்கத்தில் இவ்விதமாகச் சிறிய அளவில் கூட உற்பத்தி செய்யப்பட மாட்டாது. ஒவ்வொரு பொருள் உற்பத்திக்காகவும் தகுந்த இடங்களில் பெரிய பெரிய பூதங்களைப்போன்ற உற்பத்திச்சாலைகளை ஏற்படுத்திச் சர்க்கார் மேற்பார்வைகளில் உற்பத்தி செய்து எல்லோருக்கும் எவ்வளவு தேவையோ அவ்வளவு கொடுக்கப்படும். மேலும் தற்சமயம் முதலெல்லாம் தனித்தவர்களின் கையிலிருப்பதால் கோடிக்கணக்கான ரூபாய்கள் தேவையான பெரும் முயற்சிகள் செய்ய இயலவில்லை. உதாரணமாக இந்தியாவிலிருக்கும் நதிகளிலிருந்து மின்சார சக்தி உற்பத்தி செய்தால் இந்தியாவிலுள்ள ஒவ்வொரு சிறு கிராமத்திலும் மின்சார விளக்குகள், விசிறிகள், மின்சாரக் கருவிகள் முதலிய எல்லாச் சௌகரியங்களும், சுகாதார வசதிகளும் ஏற்படுத்திக் கொள்வதுடன் நிலங்களைக் கூட மின்சார சக்தியைக் கொண்டு வேளாண்மை செய்யலாம். இந்தியாவில் உள்ள நதிகளின் தண்ணீர் ஒரு சொட்டளவு கூட சமுத்திரத்தில் விழாமல் எல்லா நீரையும் பெரிய பெரிய மூலைகளைக் கொண்டு காடு

களிலும் மேடுகளிலும், வனாந்தரங்களிலும், குன்றுகளிலும் பாய்ச்சி அளவுக்கு மிஞ்சி உற்பத்தி செய்யலாம். மின்சாரம் முதலிய ஏராளமான சக்திகளைக் கொண்டு போக்குவரவு சாதனங்களில் விரைவை உண்டாக்கலாம். எனவே, பூமியிலுள்ள எல்லா ஜனங்களும் சேர்ந்து பூமியிலுள்ள எல்லாச் சக்திகளையும் உபயோகப்படுத்தி உற்பத்தி செய்தால் எந்த அளவுக்கும் உற்பத்தி செய்யலாம் என்பதில் எள்ளளவும் சந்தேகம் கிடையாது. மேலும் வேளாண்மை முதற்கொண்டு சமையல் வரையில் கூட்டுமுறையில் செய்தால் சேதாரம் என்பது ஏற்படாது. மேலும் கொஞ்சம் பிரயாசையில் ஏராளமாக உற்பத்தி செய்யலாம். தொழிலாளிகள் பத்து, பன்னிரண்டு மணி நேரம் வேலை செய்வதற்குப் பதிலாக வாரத்தில் ஐந்து நாட்களில் நாள் ஒன்றுக்கு நான்கு ஐந்து மணி நேரம் வேலை செய்தால் மட்டும் போதும். எல்லோருடைய தேவைகளும் பூர்த்தியாய் விடும்.

இரண்டாவது கேள்விக்குப் பதில்.

மனிதன் பணத்திற்காக மட்டும் பாடு படுவானென்றும், மற்ற எந்தச் சிந்தனையைக் கொண்டும் பாடுபடமாட்டானென்றும், பணவாசை கொண்டும், பணக்கவலை கொண்டும், ஆத்திரப்பட்டுப் படபடப்புடன் வேலை செய்தால் தான் அதிகமாக வேலை செய்யலாம் என்றும் தப்பாக எண்ணிச் சிலர் பொதுவுடமை ராஜ்யத்தில் எல்லோருடைய தேவைகளும் பூர்த்தி செய்யப்பட்டால் ஒருவரும் பாடுபடமாட்டார் என்றும் சொல்லுகிறார்கள். ஒருவரும் பாடுபடாவிட்டால் எல்லோருடைய தேவைகளும் எப்படிப் பூர்த்தியாக முடியும்?

பணத்திற்காகத்தான் மனிதன் பாடுபடுகிறான் என்று நினைப்பதே பணவாசை பிடித்த பணக்காரர்களின் மனப்பான்மை. அவர்கள் பணத்திற்காகவே பாடுபட வேண்டுமென்று எண்ணியிருப்பதால் மற்றவர்களும் பணத்திற்காகத் தான் பாடுபடுவார்களென்று நினைத்திருக்கிறார்கள். உலகத்திலுள்ள பெரியவர்களில் ஒருவரும் பணத்திற்காக மாத்திரம் பாடுபடவில்லை. பணவாசையை வெறுத்துத் தேசத்துக்காகவோ, ஏழைகளுக்காகவோ, ஒரு கொள்கைக்காகவோ, பாடுபட்டவர்கள் தான் உலகத்திலுள்ளவர்களிலெல்லாம் பெரியவர்களாயிருக்கிறார்கள். காரல் மார்க்ஸோ, லெனினோ பணத்திற்காகப் பாடுபட்டாரென்று யாராவது சொல்ல முடி

யாது. மேலும் ஜனங்களின் பாராட்டுதலைப் பெறுவதற்காகவும், பேருக்காகவும், செல்வாக்குக்காகவும், புகழுக்காகவும் தான் மனிதர்கள் அதிகமாகப்பாடுபடுகிறார்கள். இவைகளெல்லாம் சோஷியலிஸ்டு சமூகத்திலுமிருக்கும்.

சமூகத்தை மாற்ற வழி.

மனித சுபாவத்தில் எப்படிக்கொள்ளையடிக்கும் உணர்ச்சியிருக்கிறதோ அதே விதமாகவே பிறருக்காகப் பாடுபடும் உணர்ச்சியும் உண்டு. சமூகத்தில் ஏற்பட்ட கெடுதிகளாலும், நம்முடைய பிள்ளைகள் சுயலாப மனப்பான்மையில் வளர்ந்திருப்பதாலும் சமூகத்தில் அநேகக் கெடுதிகள் உண்டாகியிருக்கின்றன. இப்பேர்ப்பட்ட கெட்ட சமூகத்தில்கூட ஆயிரக் கணக்கானவர்கள் பிறருக்காகப் பாடுபடுகிறார்கள். சமூகத்தின் மனப்பான்மையை மாற்றிப் பிள்ளைகளுக்குச் சிறு பிராயத்திலிருந்தே சரியான சமூக சேவையின் மனப்பான்மையில் பழக்கினால் சமூகத்தின் நிதானமே மாறிவிடும் என்பதில் சந்தேகம் கிடையாது மனிதர்கள் நிச்சயமாகத்தங்களுக்காகவும் மற்றவர்களுக்காகவும் உற்சாகத்துடன் பாடுபடுவார்கள். மேலும அதிகமாகப் பாடுபடுகிறவர்களுக்குத்தான் அபேதவாத சமூகத்தில் செல்வாக்கும் அதிகாரமும் கிடைக்கும். இந்த அதிகார ஆசைக்காக மனிதன் பாடுபடுவானென்று எண்ணுவதில் யாதொரு சந்தேகமும் இருக்க முடியாது

எல்லோருக்கும் ஏறக்குறைய சமமான பிரதி பிரயோஜனம் கிடைத்த போதிலும் ஒவ்வொருவரும் பெரிய வேலைகளையும் அதிக சாதுரியமான வேலைகளையும் நாடி அதற்காகக் கட்டாயம் பாடுபட்டே தீருவார்கள். ஒரு கலெக்டருக்கும் அவனுடைய குமஸ்தாவுக்கும் ஒரே சம்பளமாயிருந்த போதிலும் ஒருவன் குமாஸ்தாவாக இருப்பதைவிடக் கலெக்டராக இருக்க விரும்புவான் என்பதில் ஐயமில்லை. மேலும் போட்டிகள் ஏற்படுத்திவிட்டால் மனிதர்கள் போட்டிக்காகவும் பேருக்காகவும் இரவும் பகலும் பாடுபடுவார்கள். பிள்ளைகளைப் போட்டிக்காக ஏதாவது வேலை செய்யச் சொன்னால் அவர்கள் அவர்களுடைய சக்திக்கும் அதிகமாகப் பாடுவதை நாம் பார்க்கிறோம்.

சோம்பலில்லை, சோர்வுமில்லையால்!

சுயநலமில்லா விட்டால் புதிதாக இயந்திர முதலியவை களையும், மருந்து முதலியவைகளையும் கண்டுபிடிக்க மாட்டார்களென்று சிலர் கூறுகின்றனர். வங்காளத்தில் பி. எஸ். ஸி. படித்த வாலிபன் ஒரு விஷத்தின் ருசியைக் கண்டுபிடிக்கத் தன்னுயிரைக் கொடுத்தது நம்மெல்லோருக்கும் தெரியும். ருஷியாவில் பன்னிரண்டு பேர் காற்றுமண்டலத்துக்குச் சென்று அங்குள்ள தன்மையைத் தெரிந்துகொள்ளுவதற்காக உயிர்த் தியாகம் செய்ததைப்பற்றியும்நாம் படித்திருக்கிறோம். ஜெர்மெனியிலுள்ள பலூனில் பறக்கிற ஒருவர் போலீசாரின் கண்ணை மறைத்துப் பறந்தது நமக்குத் தெரியும். இவர்கள் பணத்திற்காக உயிரை இழந்தார்களென்று சொன்னால் அது பெரிய அவதூறாகும். புதிய விஷயங்களைக் கண்டுபிடிப்பதற்காக இனாம் கொடுப்பதிற்குப் பதிலாகத் தண்டனை அளிக்கப்படும் என்று சொன்னாலும் மனிதர்கள் புதிய விஷயங்களைக் கண்டுபிடியாமலிருக்க மாட்டார்கள்.

முதலாளித்வ சமூகத்தில் ஆயிரம்பேர் பாடுபட்டு ஒருவன் எல்லா லாபத்தையும் அடைகிறான். ஒருவனுடைய லாபத்திற்காக இந்த ஆயிரம் பேர் பாடுபடுவதைவிட எல்லோருடைய பலனுக்காகவும் இந்த ஆயிரம் பேர் இன்னும் அதிக உற்சாகத்துடன் வேலை செய்வார்களென்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. முதலாளித்துவப் பொருளாதாரத்தின் சமூக உறுதியின்மையாலும, பலவித கவலைகள் ஏற்படுவதாலும், அவசரப்பட்டு வேலைகள் செய்வதாலும், செய்யக்கூடிய வேலைகள் நல்லவிதமாகவும் திருப்திகரமானதாகவும் செய்ய முடியவில்லை. அபேதவாத அரசாங்கத்தில் சர்க்கார் உதவியைக்கொண்டு ஆரஅமர படபடப்பின்றி நல்லவிதமாக எல்லா வேலைகளும் செய்யப்படும்.

சோம்பேறிகளால் நேர்ந்த வினை.

முதலாளித்துவ சமூகத்தில் கோடிக்கணக்கான சுறுசுறுப்பும் புத்தியுமுள்ள சூரர்கள் சந்தர்ப்பமளிக்கப்படாமல் படியாமலிருந்து விடுகிறார்கள். தற்காலம் படித்துக்கொண்டிருக்கிறவர்களில் மிகப்பெரும் பான்மையோர் அடிமை மனப்பான்மைகொண்ட உத்தியோகஸ்தர்களின் பிள்ளைகளும் சோம்பேறி வாழ்க்கையைக் கைக்கொண்ட வியாபாரிகளின்

பிரஞ்சு புரட்சி.

(ஜோசப் மெக்காபே)

ஏகச்சுரக்கொள்கையின் காலமுடிவில் பிரஞ்சு தேசத்தில் மிகப் பெரிய அரசியல் புரட்சி ஏற்பட்டது. அது சரித்திரத்திலேயே மகத்தான சம்பவங்களில் ஒன்று.

பிரான்ஸ் பொருளாதார நிலையிலும், அரசியல் நிலையிலும் மகா கேவலமான அந்தஸ்தில் இருந்தது. குடிகளில் பெரும்பான்மையோர் மகாக் கொடிய வறுமையில் இருந்தார்கள். குடிகளுக்குத் தாங்கமுடியாத வரிகள் விதிக்கப்பட்டன. அவ்வரிகள் உபயோகமற்ற நீதிஸ்தலங்கட்கும், ஒழுக்கம் கெட்ட கோவில்களுக்கும் செலவழிக்கப்பட்டன. அதனால் தேச மக்களுக்கே ஒருமிக்க வெறுப்பும், கோபமும் உண்டாயின. உலக முழுவதிலுமே அத்தேசத்தின் பரபரப்பு எட்டிற்று. நெப்போலியன் அரசியல் புரட்சியை வென்ற போதும், அவனை முறையே இங்கிலீஷ்காரர்களும், ஜெர்மன்காரர்களும் வென்ற போதும் எதிரிடையான காரியங்கள் நடைபெறலாயின. அரசியல் புரட்சிக்கும் அதன் பயங்கரச் செயல்களுக்கும் காரணம் நாஸ்திகமே யென்று அதைக் கண்டனம் செய்தார்கள். ஆகவே நாஸ்திகத்தை வளரவிடாமல்

பிள்ளைகளும், பண ஆசை பிடித்த பூர்ஷ்வாக்களின் தடித்த பிள்ளைகளும் தான்.

இத்தச் சோம்பேறிகளும், பீடைகளும் தாண்டித் தாண்டிப் படித்ததின் மூலம் சமூகம்இந்நிலையில் இருக்தால்ஏழைத் தொழிலாளிகளின் குழந்தைகளுக் கெல்லாம் வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டால் சமூகத்தின் நிலை எப்படி யிருக்கும்! உற்பத்தி குறையுமா? அதிகப்படுமா? எனவே, சோஷியலிஸ்டு சமூகத்தில் உற்பத்தி அதிகப்படுமென்பதிலும் எல்லோருக்கும் தேவையான வஸ்துக்கள் மிகவும் இலகுவாகவும் சொற்பப் பிரயாசையுடனும் உற்பத்தி செய்ய முடியும் என்பதிலும் யாதொரு சந்தேகமுமில்லை.

தடுத்துவிடுவதற்கு ஐரோப்பா முழுவதும் தீவிர முயற்சிகள் நடந்தன. கிறிஸ்து மத ஆதிக்கத்தை மறுபடியும் அமைக்க அரசாங்கத்தார் சட்டம் போட்டு வேலை செய்தார்கள்.

நாஸ்திகத்தையும் பிரஞ்சு அரசியல் புரட்சியையும் பற்றி நமது பிரத்தியேகமான வேறு சிறிய புஸ்தகத்தில் இனி விஸ்தாரமாய் எடுத்துச் சொல்லுவோம். விஷயத்தைப் பற்றிப் பிரபலமான கருத்துக்களும், விசேஷமாய் பிரசங்கங்களும் மத நூல்களும முற்றிலும் தப்பானவை. உதாரணமாக பாரிஸில நாட்ரிடேம் மாதா கோவிலில் ஒரு விபசாரி பகுத்தறிவுக்கு அதி தேவதையாக பட்டஞ் சூட்டப்பட்டாள் என்ற சாமான்ய கதை பொய்யானது. நாஸ்திகம் அரசியல் புரட்சியின் மிகவும் நல்ல காரியத்திற்கே பெரிதும் காரணமாயிருந்தது. அதனால் கொடிய தீங்கு ஒன்றும் விளைவதற்குக் காரணமாயிருந்ததில்லை. ஆனால் அதைப் பற்றி பிறகு பேசுவோம். பத்தொன்பதாவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் கோவில்களுக்கு விரோதமாக எழுந்த புரட்சியைத் தடுத்தது சர்க்கார்தான் என்பதைக் குறித்துக்கொள்ளவேண்டும். ஜனங்கள் நம்பிக்கை பெற்று திரும்பியதில்லை. நாஸ்திக இயக்கம் சென்றுகொண்டுதான் இருந்தது. அது நாளுக்கு நாள் வலுவுற்றது. விக்கிரக ஆராதனைக்கு வெறுப்பு வளர்ந்துகொண்டு வந்தது.

தாமஸ்பேனி, ரூஸோ, வால்டேர் ஆகிய மிகுந்த சக்தி வாய்ந்த மூன்று நாஸ்திக நூலாசிரியர்களும் ஏகேச்சுரக் கொள்கையினர். இம்மூவர்களும் ஒரே கடவுளிடத்தில் உறுதியான நம்பிக்கையுடையவர்கள். ஆனால் வால்டேர் மட்டும் சிற்சில சமயங்களில் அந்நம்பிக்கையினின்று சற்று விலகியிருப்பதாகச் சொல்லலாம், பிரான்சில் அரசியல் புரட்சி ஏற்படுவதற்கு முந்தி நாஸ்திகத்திற்கு புதிய தலைமுறைகள் தோன்றின. அவர்கள் கடவுளைப்பற்றச் சந்தேகம் கொண்டவர்களாயும் கடவுளே இல்லையென்று சாதிப்பவர்களாயும் இருந்தார்கள். நாஸ்திகமும் லோகாயுதமும் தோன்றின. இவைகளைப் பின்பற்றியவர்கள் கற்றுத் தேர்ந்த அறிஞர்களும், மிகக் கியாதி பெற்றவர்களுமாவர். இதன் அபிவிருத்திச் சரித்திரத்தை நான் இப்போது எழுதிக்கொண்டு போகவில்லை. ஆகையால் டிடிராட், ஹோல்பாக், கோண்டர்செட், ஹெல்விடியஸ் முதலியவர்கள் புதிய இயக்கத் தலைவர்களாக இருந்தார்கள் என்று மட்டும் நான் சொல்லுவேன்.

அவர்களைத் தத்துவ சாஸ்திரிகள் என்று அழைத்தார்கள். ''என் சைக்ளோ பீடியா'' என்னும் பெரிய நூல் முதல் முதலாக எழுதப்பட்ட போது, மேலே கூறப்பட்டவர்கள் பிரதானமாய் தங்களுடைய அபிப்பிராயங்களைக் கூறியிருக்கிறார்கள். அதனால் அவர்களுக்கு ''என் சைக்ளோ பீடிஸ்ட்கள்'' என்ற ஒரு பெயரும் உண்டு.

இப்போது மதத்திற்கு விரோதமான நவீன புரட்சியின் ஒழுங்கான வளர்ச்சியைப்பற்றி ஆராய்ந்து பார்க்க விரும்புகிறோம். அதன் விபரங்களைப்பற்றி கற்க நாம் விரும்பவில்லை நவீன அறிவு விருத்தியின் காரணத்தாலேயே சுபாவமாக அத்தகைய நிலைமை ஏற்பட்டது என்று நாம் அறியவேண்டும். அது தோன்றி மறையும் இயல்பினதல்ல. புரொபெசர் ஆஸ்பர்ன் போன்ற நூலாசிரியர் தெளிந்த விஞ்ஞான அறிவுடையவர். அவர் மத நூல் ஆசிரியர்களுடன் சேர்ந்துகொண்டு, புரட்சி சென்ற தலைமுறையில் விஞ்ஞானம் காரணமாய் எழுந்த லோகாதயத்திலிருந்து தோன்றினது என்றும், இந்த லோகாதய அலை ஓய்ந்துவிட்டது என்றும், மதம் இனி புதிய வளர்ச்சியை அடையுமென்று நாம் எதிர்பார்க்கலா மெனவும் கூறியிருக்கிறார். அப்படிப்பட்ட உரைகள் அறவே பொய்யானவை.

பிரஞ்சு தத்துவ சாஸ்திரிகளுடைய ஆழ்ந்த நாஸ்திகம் விஞ்ஞானம் கலந்ததாயிருந்தது. முற்காலத்திலிருந்த பிரஞ்சுக் கணித சாஸ்திரி பிரக்யாதி பெற்ற டெஸ்கார்ட்டிஸ் என்பவர் ஆத்மா என்ற ஒன்று இல்லையென்றும், பிராணிகளுக்கு ஜீவாதாரக் கொள்கை யென்று கிடையாதென்றும் சொல்லியிருக்கிறார். ஒரு வாலில்லாக் குரங்கின் உடலோ, அல்லது ஒரு கழுகின் உடலோ ஒரு வெறும் இயந்திரம் என்று அவர் கூறியிருக்கிறார். வேடிக்கையாகப் பேசும் அக்காலத்திய வைதிகப் பெண் ஒருத்தி ''டெஸ்கார்ட்டிஸ் தீர்மானப்படி ஆண் நாய் என்ற இயந்திரத்தையும், பெட்டை நாய் என்ற இயந்திரத்தையும் சேர்த்தால் குட்டி நாய் என்னும் சிறிய இயந்திரம் நமக்குக் கிடைக்கிறது'' என்று கூறினார்.

தற்காலத்திய இயந்திர சித்தாந்தம், அல்லது வாழ்க்கைத் தத்துவம், உலக தத்துவம் அல்லது லோகாதயம் என்பதற்கு இது தான் ஆரம்பம். பிரஞ்சு என்சைக்ளோ பீடிஸ்ட்கள் ''நாய் விஷயத்தில் எது உண்மையோ அதுவே மனிதனிடத்

திலும் உண்மை" என்று கூறியிருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் "மனிதன் ஒரு இயந்திரம்" என்ற பேர்போன ஒரு நூல் எழுதினார். டிஸ்கார்டிஸ் என்றவர் மிக நுண்ணியபரமாணுக்களிலிருந்து கிரகங்களும் நக்ஷத்திரங்களும் எப்படி உண்டாகி வளருகின்றனவென்பதைப் பற்றிய ஒரு சித்தாந்தத்தை வெளியிட்டார். இந்தச் சித்தாந்தத்திற்கான ஆதி கருத்துக்களை அவர் புராதன கிரேக்கர்களிடமிருந்து பெற்றார். அவருடைய கருத்தை ஸ்வீடென்போர்க் கடன் வாங்கினார். அதை ஜெர்மன் தத்துவ சாஸ்திரி காண்ட் என்பவரும், பிரக்யாதி பெற்ற பிரஞ்சு இயற்கை சாஸ்திரி பப்பூன் என்பவரும் விருத்தி செய்து வைத்தார்கள். அப்படிப்பட்ட சித்தாந்தங்கள் உலகத்தின் கிருஷ்டி கர்த்தா என்னும் எண்ணத்தை அடியோடு ஒழித்து விட்டதாகவே தோன்றுகிறது.

இந்த விதமாக பதினெட்டாவது நூற்றாண்டுக்கு முன்பே விஞ்ஞானம் நாஸ்திக வளர்ச்சிக்கு சக்தி அளித்துக்கொண்டு வந்தது. ஆனால் இந்த உதவி மிகவும் குறைந்ததாகவே இருந்தது. விஞ்ஞானத்தில் மனிதர்களுக்கு அக்காலத்தில் கருத்தில்லாதிருந்தது. ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் நாஸ்திக மதமென்பது ஏகிச்சுர கொள்கையாகவே இருந்தது. அது கிறிஸ்தவ நாகரீகத்திற்கு முக்கிய நாகரீகத்தைப் புகழ்ந்தது. அது பைபிளை மிகப்பலமாய்க் கண்டித்தது. அது ஒரு இலக்கிய சரித்திர இயக்கமாக இருந்தது.

ஆகையால் அவ்வியக்கம் பொதுவாய் தேவைக்கு மேற்போனதாக இருந்தது. பைபிளில் உள்ள முரண்பாடுகளைக் கண்டுபிடிக்க அதிகமான படிப்போ, முயற்சியோ வேண்டியதில்லை. ஜோவா, ஜோனா கதைகளைப்பற்றி ஏளனஞ் செய்யவும் பிற வற்றிற்கும படிப்பும் முயற்சியும் அதிகம், தேவையில்லை. பதினெட்டாவது நூற்றாண்டின் முடிவில் அது சரியானபடி அதிகமான விஞ்ஞான சம்பந்தம் பெற்றது. பைபிளின் கண்டனம் தர்க்கம் முதலியவை விஞ்ஞானத்தை ஒட்டி எழுந்தன. ஹீப்ரு நூலாகிய அப்புத்தகம் வெகுஜாக்கிரதையாக வாசிக்கப்பட்டு ஆராய்ச்சி செய்யப்பட்டது. பழைய ஏற்பாட்டின் ஹீப்ரு நூல் பூர்வகாலங்களில் பற்பல பகுதிகளில் ஏற்பட்ட புத்தகங்களிலிருந்து எடுக்கப்பட்ட விஷயங்களின் தொகுப்பு என்று கண்டுபிடித்தார்கள். கிறிஸ்துவுக்குச்சில நூற்றாண்டுகளுக்கு முன்பு யூதக் குருக்கள்மார்கள் அப்புத்தகங்களின் விஷயங்களை மாற்றியிருந்தார்கள்.

அதுவே பைபிளின் உயர்தர ஆராய்ச்சி எனப்படும். பதினைந்தாவது நூற்றாண்டிலிருந்தோ அல்லது பத்தொன்பதாவது நூற்றாண்டிலிருந்தோ பத்தாவது நூற்றாண்டைப் பற்றி இங்கிலீஷ்காரர்களுக்கு நம்மால் சுலபமாய்க் கூறமுடிவதுபோல ஹீப்ரு பைபிளில் பற்பல நூற்றாண்டுகளின் விஷயத்தை நாம் காண முடியும். அது ஒரு நல்ல உபயோகமுள்ள நூல். அது பழைய கால சாம்ராஜ்ய விஷயங்களிளெல்லாம் சம்பந்தம் பெற்றிருப்பதால் அதன் விசேஷம் அதிகமாக இருக்கிறது. பரிணாம உதவியில்லாமல் மக்கள் சொன்னவுள்ள பைபிள் பிரமாணம் சிதறுண்டு போகத்தக்கது. பைபிளில் சிருஷ்டி விபரங்களைப்பற்றிக் கூறும் முதல் புத்தகம் எனப்படும "ஜீனிஸிஸ்" என்பது விஞ்ஞானத்திற்கே ஒத்து வராத ஒரு முரட்டு அபிப்பிராயத்தைச் சொல்வது.

இதே சமயத்தில் சரித்திரம் விஞ்ஞான வழிபற்றியதாயிற்று. கியாதிவாய்ந்த ஆங்கில சரித்திர ஆசிரியர்களான ஹ்யூமும், கிப்பன் ஆகிய இருவரும் உலகத்திற்கு அநேக சரித்திர புஸ்தகங்களைக் கொடுத்து வந்தார்கள். அவர்கள் எழுதிய சரித்திர புத்தகங்கள் அவர்களுக்கு முந்தி வெளிவந்த சரித்திரங்களையெல்லாம் குழந்தைக் கதைகளாக்கின. மேற்கோள்களாகக் கூறப்படுபவைகளைத் தாக்கித்துப்பார்க்க வேண்டுமென்று அவர்கள் ஜனங்களுக்கு முதல் முதலாகக் கற்பித்தார்கள்.

கிப்பன் என்பவர் "ரோம் ராஜ்யத்தின் அழிவும் வீழ்ச்சியும்" என்னும் சிலாக்கியமான ஒரு புஸ்தகம் எழுதினார். அதன் ஒரு பகுதி குறிப்பாய் கிறிஸ்து மத எழுச்சி என்பதைப் பற்றி விளக்கிற்று. அது நாஸ்திகம் அதிகமாகப் பரவுவதற்குப் பெரிய சாதனமாயிற்று. முதன் முதலாக மனிதனுடைய சரித்திரம் கதைகளாக இல்லாமல் எழுதப்பட்டு வந்தது. தெய்வீகச் சம்பந்தமற்ற பூரண இயற்கைச் சம்பவமாகவே அது கருதப்பட்டது. ஈசுவரக்கொள்கை பற்றிய கிப்பன் கடைசியில் நாஸ்திகனாகி விட்டார். அவர் சரித்திரத்தில் கடவுளுடைய ஒரு விரலும் வேலை செய்யவில்லையென்று கண்டார். பிரசித்தி பெற்ற வான சாஸ்திரியான லாப்லேஸ் என்பவர் வானமண்டலங்கள் எங்கும் கடவுள் செய்ததாக நம்பக்கூடிய அடையாளம் ஒன்றையுமே காண முடியவில்லை என்றார்.

ஆகையினால் விஞ்ஞானத்தை விட சரித்திரமே ஆரம்பம் முதல் முக்கியமாய் நாஸ்திகத்திற்கு அஸ்திவாரமாய் இருந்திருக்கிறது. இன்றைக்கும் சரித்திரம் முக்கியமானது தான். எனக்கு விஞ்ஞானமும் சரித்திரமும் ஒன்றுதான். சரித்திரம் என்பது மனிதனைப்பற்றிய தொடர்ச்சியானகதை; விஞ்ஞானம் அதன் பழையகால அந்தகாரத்தைப் போக்கி வாழ்க்கை அபிவிருத்தியை நன்கு விளக்கக்கூடியது. சரித்திரத்தின் முக்கியபாகம் பிந்தியபாகத்தைப்போலவே நாஸ்திகத்தன்மை பெற்றதாயிருக்கிறது. பரிணாமக் கொள்கையை நம்பாதவர்கள் பரிணாமத்தோடு ஏன் எதிர்த்து சண்டை போடுகிறார்கள்? ஏனென்றால் அது சிருஷ்டிகர்த்தா இல்லை என்பதில் கொண்டு விடுகிறது. அதுபோலவே நவீன சரித்திரம் மனித சரித்திரத்தின் ஒவ்வொரு பக்கத்திலிருந்தும் அற்புதச் செயல்கள் என்பவைகளையெல்லாம் ஒழித்தே விடுகிறது. பின் மேற்செல்கிறது. சரித்திரத்தில் மனிதன் தட்டுத்தடுமாறினால் இரக்கமில்லாமல் அது மானிடர்களுக்கே இயல்பான சம்பவம் என்று விளக்கப்பட்டுப் போகிறது,

மேலும், இப்புதிய சரித்திரத்திற்குப் பத்தொன்பதாவது நூற்றாண்டில் மிகவும் பெரிய உதவி கிடைத்தது. சீர் திருத்தத்தினால் கிறிஸ்து மதம் பரவாதிருந்த நாடுகளில் வெறுப்புத் தோன்றிற்றா என்ற விஷயம் பொய்யானதும் அர்த்தங் கெட்டதுமாகும். கிறிஸ்து உலகில் பிறப்பதற்கு முந்தி உலக மக்கள் யாவரும் அந்தகாரத்தில் அழுந்தி மரணத்தை நெருங்கிக்கொண்டிருந்தார்கள் என்றும் கட்டுக்கதை ஆரம்பமாயிற்று. இக்கட்டுக்கதை நவீன மக்கள் மனதில் ஆழமாய்ப் பதிந்துவிட்டது. கிறிஸ்து மதத்திற்குப் புறம்பேயிருந்த நூலாசிரியரான ஹெச். ஜி வெல்ஸ் என்பாரும் தமது "அவுட்லைன் ஆப் ஹிஸ்டரி" என்னு நூலில் அவ்விஷயத்தைப் புகுத்தியிருக்கிறார். கிறிஸ்து மதம் பரவாதிருந்த பண்டைக்காலப் பெரிய நாடுகளில் உள்ளவர்களுக்கு வெல்ஸ் மிகவும் அநீதி இழைத்திருக்கும் விபரங்களைப் பற்றி வேறு புஸ்தகங்களில் கூறுவோம்.

இக்கட்டுக்கதை சீர்திருத்தக் காலத்திலிருந்தே உண்டாயிருக்க வேண்டுமென்கிறேன். கத்தோலிக்கர்கள் சமீப காலத்தில் பிராட்டஸ்டண்டுகளைப் போலவே அதைத்தாராளமாய் உபயோகிக்கிறார்கள். ஏனென்றால் அது உண்மையாகவே மார்ட்டின் லூதர் காலத்திருந்தும், சீர்திருத்தக்கார

காலத்திருந்தும் ஆரம்பமாயிற்று. அதை உலகம் முழுதும் நம்பிற்று. அக்காலத்திற்கு முன்பு ஏராளமான கிறிஸ்தவப் படிப்பாளிகள் இருந்தார்கள் அவர்கள் புராதன கிரீஸ், ரோம் சிறப்புகளைப்பற்றி அறிந்திருந்தார்கள். டாண்ட்டி என்பவர் வியப்பிற்குரிய தமது கிறிஸ்தவக்காவியத்தில்கிறிஸ்து வரக்லாத கவிஞர் விர்ஜில் என்பவரைத் தமக்கு வழிகாட்டி யாகக் கொண்டார். கோவிலை எதிர்ப்பதற்காக பெருமை மிக்க ரோமானியர்களையும், கிரேக்கர்களையும், நரகத்தில் போட மறுக்கிறார். கிரீஸ், ரோம் ஆகியவைகளின் மேல் காட்டப்பட்ட மரியாதையானது புனருத்தாரண காலத்தில் இயற்கையாகவே மிகையாகக்கூறப்பட்டது. (ரோமில் அநேக போப்களைக் கிறிஸ்தவர்கள் என்றே சொல்ல முடியாது. அவர்கள் கிறிஸ்தவர் அல்லாதவர்களாகவே இருந்தார்கள்) சீர்திருத்தக்காரர்கள் எதிர் கடைசிக்கு இயற்கையாகவே சென்று விட்டார்கள்.

நவீன சரித்திரம் சமநிலையை உண்டாக்கிற்று. டாக்டர் ரீலியோடு நான் ஒரு முறை தர்க்கவாதம் செய்தேன். அப் போது ஆதிக்கத்தாக் கொள்ளையையுடையவர்களுடைய மத வெறிகொண்ட தலைவர் நாம் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னே இருந்த கிரேக்கர், ரோமனியர்களைவிட இன்று அதிகமாக உயர்ந்துவிடவில்லையென்று அழுத்தமாகக் கூறி னார். அதைக்கேட்டு நான் வியப்படைந்தேன். "இரண்டா யிரம் வருஷங்களாக இருந்து வரும் கிறிஸ்துமதத்தின் நன்மை யெங்கே!" என்று நான் கேட்டேன். ரீலி கூறியது சரியானதென்றும் தவறானதென்றும் கூறலாம். பதினைந் தாவது நூற்றாண்டின் நடுவில் ஐரோப்பா மறுபடியும் புரா தன கிரீஸ், ரோம், நிலைமைக்கு வந்தது. அது முதல் மத ஆதிக்கம் குறைந்துவந்தது. அதை நாம் கடந்து விட்டோம்.

கிரீஸிலும் ரோமிலும் உள்ள பெரிய நீதி சாஸ்திர நிபு ணர்களெல்லாம் புதிய சரித்திரத்தில் தங்களுக்குப் பிரமாணம் தேடிக்கொண்டார்கள். புதிய ஏற்பாட்டின் ஒவ்வொரு அழ கிய அபிப்பிராயமும் ப்ளாட்டோவின் வார்த்தைகளுக்கும், ஸ்டாயிக்ஸ் சிஷ்யர்களின் வார்த்தைகளுக்கும் ஒத்திருந்ததாகக் காட்டப்பட்டது. நாஸ்திகத்திற்கு அது மற்றொருகையா யிற்று. உலகம் ஏமாற்றப்பட்டது. ஆனால் மிகவும் அழகிய சக்திவாய்ந்த ஆயுதம் பிறகு கண்டுபிடிக்கப்பட்டது.

நெப்போலியன் உலகத்தையே பிடித்துவிட வேண்டு மென்று கனவுகண்டு எகிப்திற்குப் போனான், அவனுடைய ஆடம்பர வழக்கத்தின் படி அவன் தன்னுடன் ஒரு கப்பல் நிறைந்த படிப்பாளர்களையும் அழைத்துச்சென்றான். இங்கி லீஷ்காரர்கள் பிரஞ்சுகாரர்களைப் பின் தொடர்ந்தார்கள். அவர்கள் புதியதாய்க் கண்டுபிடித்தவைகளில் சேர்த்தி யானவைகளை யெல்லாம் திருடிக்கொண்டார்கள். பக்தி மிகுந்த அந்தக்காலத்தில் அது தர்ம நீதிக்கு உட்பட்ட தென்றே கருதப்பட்டது. எகிப்தின் விஷயத்தைப்படிக்க ஆரம்பித்தார்கள். புராதன எகிப்து எழுத்திற்குச் சாவி போன்ற படிக்கும் வழி கண்டுபிடிக்கப்பட்டது. மிகப்பழைய காலத்து ராஜ்யம் மதப்பற்றுள்ளதாயும் நீதியுள்ளதாயுமிருந் திருப்பதைக்கண்டு உலகம் அதிசயித்தது. எகிப்து மூட்டாய ஆமென் காலத்திற்கு முன்பு நிரந்தரமான ஒரே கடவுளை வழிபட்டு வந்திருக்கிறது. அடுத்தார்ப்போல் பூர்வீக பேபி லோன் முறை வந்தது. கல்வெட்டு சாசன அதிகாரிகளின் மண்வெட்டிகளால் அங்குள்ள விசேஷங்கள் வெளியாயின. அவை மிகுந்தபயம் கலந்த ஆச்சரியகரமாக இருந்தன. உல கம் பேபிலோன் வாசிகளைப்பற்றிய உண்மை அறியாமல் இரண்டாயிரம் வருஷங்களாக முழுதும் ஏமாற்றப்பட்டிருந் தது. நாம் ஏராளமான இலக்கியத்தைக் கண்டோம். அப் பாஷையைப் படிக்கவும் வழி தெரிந்தோம். பேபிலோனியர் களுக்குச் சட்ட வகுப்புகளும் இருந்ததாக அறிந்தோம். பேபிலோன் அக்கிரமத்தில் அழுந்திக்கிடந்தது. ஏன் அவர் கள் விபசாரத்திற்காக மனிதர்களை நதியில் அமிழ்த்தியும் பல வந்தச்சேர்க்கைக்காக ஆடவர்களை உயிருடன் கொருப் பிட்டுக்கொழுத்தியும் வந்தார்கள் என்பதை நாம் கண்டோம்.

உலக உற்பத்தியைப் பற்றியும் மனித உற்பத்தியைப் பற்றியும் வேண்டிய தஸ்தாவேஜுகளை நாங்கள் அடைந் தோம். ஒருவருக்கும் அதைப் படிக்கத் தெரியவில்லை. உலக உற்பத்தியைப் பற்றிச் சொல்லும் முதல் புத்தகம் எனப் படும் "ஜீனிஸிஸ்" என்னும் நூல் ஐயாயிரம் அல்லது ஆறா யிரம் வருஷங்களுக்கு முந்திய காலத்திய கதைகளின் தொகுப்பு என்பதை யாரும் அறியக்கூடவில்லை. அக்கதை களின் பாஷைகடை மதாச்சாரத்திற்குத் தக்கபடி மாற்றப் பட்டது. சிருஷ்டியின் விருத்தாந்தம், ஆதியில் படைக்கப் பட்ட முதல் சதிபதிகள், தோட்டம் வீழ்ச்சி, பிரளயம் முத லியவை, "ஜீனிஸில்" என்னும் புத்தகத்தில் சொல்லப்பட்ட

கதைகளோடு சரியாய் ஒத்திருக்கிறது. உலகம் இவ்வுண்மையைக்கண்டு ஆச்சரியமடைந்தது. அந்த உண்மை பத்தொன்பதாம் நூற்றாண்டு முழுவதும் பரவலாயிற்று. மறுபடியும் "ஜீனிஸிஸ்" நூலில் இருந்த நம்பிக்கை ஒழிந்தது. நவீன பூகற்ப சாஸ்திரத்தோடு எவ்வித சண்டையுமில்லாமலே கதையின் நம்பிக்கை அழிந்தது.

இந்தச் சங்கதியை பரவவைக்க வேண்டிய வேலையைப் போல அமெரிக்கா கல்வி இலாக்காவில் முக்கியமான விஷயம் வேறு ஒன்றுமில்லை. "ஜீனிஸிஸ்" புத்தகத்திலுள்ள பேபிலோனியன் கதைகளைப் படிப்பாளிகள் சென்ற சுமார் ஐம்பது வருஷங்களாக அறிந்திருப்பவைகளைப் பற்றி மிகச் சிறிய ஞானமும் ஆதி கர்த்தர் கொள்கையினரின் எந்த ஒரு தலைவனுக்கும் கிடையாது. அவர்கள் யாவரும் கடவுளுடைய வார்த்தைகளைப் பற்றிப் பேசுகிறார்கள். பூர்வீக பேபிலோன் மெசப்பொட்டோமியாவில் அழிந்தபடியே இன்றும் கிடப்பதாக அவர்கள் கருதுகிறார்கள் போலும். சிருஷ்டிக் கதைகளும் வீழ்ச்சியும், பிரளயமும் பண்டைக்காலத்து சாமான்யக் கட்டுக்கதைகள் என்று யாரும் சொன்னதில்லை. அமெரிக்காவில் லட்சாதி லட்சம் ஆதி கர்த்தாக் கொள்கையினருக்கு அது புதிதாய் வெளிவந்த ஒரு பெரிய விஷயமாகும். மெசப்பொட்டோமியாவில் நகரங்களில் அழிந்துகிடந்த விடங்களில் நாம் கண்டெடுத்த சில கல்வெட்டு சாஸனங்களின் மொழி பெயர்ப்புகளைப் படிக்கவே அவர்களுக்குப் புதிய விஷயங்கள் தெரியலாயின. மெசப்பொட்டோமியா நகரங்கள் ஹீப்ருகாரர்கள் எழுதப்படிக்கத் தெரியாதிருந்த காலத்திற்குப் பல்லாண்டுகளுக்கு முன்பு அழிந்து போனவை.

ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டில் மதத்திற்கு விரோதமாக எழுந்த பெரிய புரட்சியை உண்டாக்கின காரணங்கள் எல்லாவற்றையும் நாம் இன்னும் சொல்லி முடிக்கவில்லை. விஞ்ஞானம் என்னும் விஷயம் ஒரு புறமிருக்கட்டும். அடுத்த காரணம் தத்துவ சாஸ்திரமாகும். தத்துவ சாஸ்திரம் என்றால் என்னவென்று விளக்குவது இங்கு உபயோகமற்ற விஷயம். தத்துவம் என்றால் நம்முடைய சிந்தனா சக்தியைப் பற்றிய ஆராய்ச்சியாகும். உண்மையைப் பற்றிய ஆழ்ந்த யோசனையின் முடிவு காண்டல் எனலும் தகும். தத்துவ சாஸ்திரத்தைப் பற்றி அவ்வளவு சொன்னால் போ

தும். பதினெட்டாவது நூற்றாண்டின் இரண்டாவது பாதியில் ஜெர்மனியில் காண்ட் என்பவரிடமிருந்து அநேக உயர்ந்த தத்துவ சாஸ்திரிகள் ஜெர்மனி, இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலியா, அமெரிக்கா முதலிய விடங்களில் தோன்றி வந்தார்கள்.

மனோராஜ்யம் செய்யும் சிந்தனா சக்திக்காரர்கள் எப்படி மகாஜனங்களின் மனப்பான்மையை மாற்றி நாஸ்திகத்தை வளர்க்க முடியும்? ஏகீச்சுர இயக்கம் தீர்க்க தரிசன நம்பிக்கையை ஆட்டி விட்டதைப்போல மனிதனுடைய பகுத்தறிவினால் கடவுளின் இருப்பையும் ஆன்மாவின் அழிவின்மையையும் ருசுப்படுத்த பலமான முயற்சி நடைபெற்று வந்தது. ஒவ்வொரு மத வாதியும் மேலே கூறப்பட்ட விஷயங்கள் உண்மையில் பகுத்தறிவினாலேயே ருசுப்படுத்தப்பட வேண்டும் என்று அறிந்திருக்கிறான். அதன் பிறகே தீர்க்க தரிசனத்தைப் பற்றி நினைக்க வேண்டும். நாம் முதலில் தீர்க்கதரிசியைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டும். இக்காரணங்களையெல்லாம் ஆராய்ச்சி செய்வது தத்துவ சாஸ்திரிகளின் வேலை. நம்பிக்கை யென்பதைத் தத்துவ சாஸ்திரிகள் அழித்துவிட காரணமானார்கள். அவர்கள் எல்லாத்துறைகளின் அபிவிருத்தியைப பற்றியும் ஆழ்ந்த சிந்தனை செய்யக் கூடியவர்கள்.

முடிவாக சமுதாய சீர்திருத்த இயக்கம் பத்தொன்பதாவது நூற்றாண்டில் மத விரோதப் புரட்சியை வளர்த்து விடலாயிற்று. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் பாதியில் மனிதனுடைய உரிமைகளுக்காக நடந்த பெரும் போராட்டத்தைப் பற்றி எவரும் இப்போது அறியமாட்டார்கள். அமெரிக்காவில் இவ்விஷயம் ஒருவாறு சுலபமாய் அறியப்படுகிறது. அமெரிக்காவில் அரசியல் ஸ்தாபனம் பகுத்தறிவுக் கொள்கை பற்றியவர்களாலேயே ஆக்கப்பட்டிருந்தது அவர்களுக்கு மானிட உரிமைகளில் மிகுந்த கருத்துண்டு. அமெரிக்காவில் கைத்தொழில் நிலைமை ஐரோப்பாவைவிட நன்றாகஇருந்தது. ஐரோப்பாவைப்போல அமெரிக்கா நியாயத்திற்காக அதே பயங்கரப் போராட்டத்தைக் காணவில்லை. எந்த மனிதனாவது தற்கால மத இயக்கத்தைச் சரியாய் முழுதும் தெரிந்து கொள்ள வேண்டுமானால், அவன் அப்போராட்டத்தைப்பற்றிக் கொஞ்சம் அறிந்திருக்க வேண்டும்.

நெப்போலியனுடைய வீழ்ச்சிக்குப் பிறகு சிற்றரசர்கள் அதிகாரத்திற்கு வந்தார்கள். ஒவ்வொரு தேசத்திலும் மதாதிபதிகளே அவர்களுக்குப் பலமுள்ள உதவியளித்து நின்றார்கள். அவர்கள் யாவரும் ஒன்று சேர்ந்துகொண்டு இருந்தார்கள். அவர்களை தெய்வீக நேசக்கூட்டம் அல்லது வெள்ளைப் பயங்கரம் என்று சரித்திரம் கூறுகிறது. அரசையோ கோவிலையோ யாராவது எதிர்த்தால், அவர்கள் இரக்கமின்றித் தண்டிக்கப்பட்டார்கள். சீர்திருத்தம் என்பது ஒன்றும் வேண்டாமென்று மறுக்கப்பட்டது. பாதிரிகள் இந்த சீர்திருத்தத்தை மறுக்க ஒன்றுபட்டிருந்தார்கள். ஒவ்வொரு தேசத்திலும் மனித உரிமைகளுக்குச் சண்டை போட்டவர்கள் பிரதானமாய்ச் சுதந்தரச் சிந்தனா வீரர்கள் தான். பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்திவரையில் அவர்களுடன் எந்தப் பாதிரியும் சண்டை போடவில்லை. கோவில்கள் அவர்களை அசட்டை செய்தன. கல்வி, கைத்தொழில் விருத்தி, குழந்தை உழைப்பு, அரசியல் உரிமைகள், பெண் சுதந்தரம், சிறை சீர்திருத்தம் முதலிய மக்களின் அவசரமான சீர்திருத்தங்களுக்குப் பாதிரிகள் விரோதிகளாயிருந்தார்கள்.

கிறிஸ்தவ நீதி ஒருவிதமாகவும், பாதிரிகளின் உண்மையான நடத்தை ஒருவிதமாவும் இருந்தது. இதை ஐரோப்பியக் குடிஅரசுகள் விரும்பவில்லை. மதத்தைப்பற்றிய அறிவாராய்ச்சியால் மனமும் அறிவும் போராடலாயின. கற்றறிந்த தனவந்தரிடமிருந்தும், மத்திய வகுப்பினரிடமிருந்தும் புரட்சி லட்சாதிலட்சம் ஜனங்களிடையே பரவலாயிற்று. கல்வி அபிவிருத்தியும், புஸ்தகமலிவும் மகாஜனங்களின் புரட்சியைப் பூர்த்தி செய்யலாயிற்று.

நீராவி மோட்டார்

சுமார் முப்பத்தொரு வருஷ காலமாக பலவித ஆராய்ச்சிகள் செய்து பார்த்ததன் பயனாக, ஸ்டாபோர்டு ஷயரிலுள்ள பெஸ்ட்விக் என்னும் எஞ்ஜினீயர் நீராவியால் ஓடும் மோட்டாரைக் கண்டுபிடித்திருக்கிறார். மணிக்கு இது 50 மைல் வேகத்தில் ஓடுகிறதாம்.

கமால்பாஷா வரலாறு.

துருக்கிக் குடியாசுத் தலைவர் காஜி முஸ்தபா கமால் பாஷா அவர்கள் 1881-ம் ஆண்டில் ஸலோனிகா நகரில் பிறந்தார்.

இவர் ஸலோனிகாவில் வசித்து வந்த ஒரு துறைமுக உத்தியோகஸ்தரின் குமாரர். இவர் சிறு குழந்தையாக இருக்கும் போதே இவருடைய தந்தை இறந்துவிட்டார்.

இவருக்கு வயதானதும், துருக்கி மத போதகராகிய காஜி யாகவேண்டுமென்பது அவர் தாயின் விருப்பம். இவருக்கோ வயதெட்டியதும்பெரிய துருக்கிப்போர்வீரனாகவேண்டுமென்பது இவரது விருப்பம்.

கமால் பாஷா அவர்கள் மிகப் பிரபலம் வாய்ந்த அனத்தோலிய குடும்பத்தைச் சேர்ந்தவராவர்.

இவர் கணக்கில் சிறு பிராயமுதல் கெட்டிக்காரர். 'கமால்' என்றால் ரைட் என்று பொருள் என்று சொல்லிக்கொண்டு, பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர் இவரைத் தட்டிக்கொடுப்பார்.

இராணுவப் பயிற்சி

ஸலோனிகாவில் இராணுவ ஆயத்தப் பள்ளிக்கூடத்தில் பயின்று மானாஸ்டரில் உத்தியோகஸ்தர் படிப்புப் பாடசாலையில் பயின்று, கான்ஸ்தான்திநோபிளிலுள்ள யுத்தசாஸ்திர கலாசாலையில் பயின்று 22-வது வயதில் கிராடியுவேட் பட்டம் பெற்று சேனையில் லெப்டினண்டு உத்தியோகம் பெற்றார்.

வாலிபப்பருவத்தில் பொது இலாகாவின் ஒரு இளந்தலைவர் என்ற முறையில் அவர் இளந்துருக்கியர்களின் தலைவருள் ஒருவராக விளங்கி வந்தார்.

அன்வர் பாஷா, தலா அத்பே, ஜெமால்பாஷா ஆகியோர் இவரது கூட்டாளிகளாகவும், சகாக்களாகவும் இருந்தனர்.

இவருக்கு சுதந்திரத்திலுள்ள அவா இவ்வளவென்று சொல்ல முடியாது கமால் யுத்தப் பயிற்சியில் பட்டம் பெற்ற வுடனே, கான்ஸ்தாந்திநோபிளில் ஸ்தாம்பூல் என்ற பகுதி யில் "இரகஸ்ய சுதந்திர சங்கம்" என்றதோர் சங்கத்தை ஏற் படுத்தி, அதற்கென்று ரகஸ்யமாய் ஓர் சிறுபடையை அமைத் துக்கொண்டார்.

இதற்காக கமால் கைது செய்யப்பட்டு இல்டிஸ்கையோஸ் என்னுமிடத்தில் ரூபாலிஸ் சிறையில் 3-மாத காலம் ஓர் ஒடுக் கறையில் அடைக்கப்பட்டிருந்தார். அதன் பிறகு டமாஸ் கஸ் என்ற விடத்திலுள்ள காலாட் படையில் சேர்க்கப் பட் டார்.

இவ்விளங் துருக்கியர், அக்காலை துருக்கியை யாண்டு வந்த ஸுல்தான் அப்துல் ஹமீத்கானிடம் சீர்திருத்தம் வேண் டினர். 1909-ம் ஆண்டில் ஸுல்தான் அப்துல் ஹமீத்கான் சிம்மாஸனத்தினின்று இறக்கப்பட்டு, அவரது சகோதரர் ரஷீத்கான் ஐந்தாவது முகம்மதாகப் பட்டம் சூட்டப்பட்டார்

துருக்கியர் முன்னேற்றச் சங்கம்.

இவர் ஸலோனிகாவுக்குத் திரும்பி வந்த பிறகு சுதந்திர சங்கத்தை முன்னேற்ற சங்கம் என்ற சங்கத்துடன் ஒன்று படும்படி சேர்த்துவிட்டார். அது தான் இப்பொழுது முன் னேற்ற ஐக்கிய சங்கம் என்ற பெயரின் கீழ் ஸலோனிகா, மொனாஸ்டிர், உஸ்கப் இவைகளில் பிரபலமாகப் பரவி அநேக மெம்பர்களைக்கொண்டு சிறப்புடன் விளங்கி வருகின்றது.

அப்துல் ஹமீத்கான் அவர்களின் ஆட்சி அடங்கி அன் வர்பாஷாவின் ஆட்சி ஆரம்பமான தும் கமால் பாஷா அரசியல் விஷயத்தில் தலையிடாமல் விலகியே இருந்து விட்டார்.

1912-13ல் நடைபெற்ற பால்கன் யுத்தத்தில் கமால்பாஷா அவர்கள், டார்டனல்ஸ் சேனைகளின் தலைமை இலாக்காவின் மேஜராக இருந்தார். அதுசமயம் பக்ரீபாஷா அவர்கள் 4வது பல்கேரியத் துருப்புகளை எதிர்த்து வந்தார்.

ராஜ்யத்தின் காப்பிற்காக ஜெர்மனியுடன் சேர்ந்து 1914ம் வருஷத்தில் அன்வர் பாஷா பிரமாதமாக யுத்தம் செய்ய ஆரம்பித்தபோது சோபியாவில் இராணுவப்படையில் இருந்து வேலைசெய்துவந்த கமால்பாஷா அதைவிட்டுகான்ஸ் தாந்திநோபிள் வந்து சேர்ந்தார்.

தமது தேசத்தின் நிலை, யுத்தத்தில் ஈடுபடும் பக்குவ நிலையிலில்லை என்று கமால்பாஷா நன்றாய் உணர்ந்தார். எனினும், அன்வர் பாஷாவினுடைய நோக்கம் யுத்தத்தில் ஈடுபடவேண்டுமென்பதாகும். அவரது நோக்கப்படியே துருக்கி யுத்தத்தில் ஈடுபட்டது. அன்வர் பாஷா 19-வது டிவிஷன் சேனையை இவரிடம் கொடுத்து டார்டனல்ஸுக்கு அனுப்பி விட்டார். அத்தருணத்தில் கமால்பாஷா அனபார்ட்டாவில் பிரிட்டிஷ்காரர்களை எதிர்த்து வெற்றிபெற்று கீர்த்தி பெற்றார்.

1913-முதல் 1915-வருஷம் வரை ஸோபியாவிலுள்ள துருக்கித் தூதுவக் காரியாலயத்தில் இராணுவ இலாக்காவில் சேர்ந்திருந்தார்.

கமால் பாஷா அவர்கள், 1915-ம் வருஷம் கலிப்போலி யில் பிரிட்டிஷார் தங்கள் சேனையுடன் முன்னேறுவதைத் தடுத்து அவர்களை முறியடித்துப் பின்னடையச் செய்தார். ஜெர்மனியின் நேசத்தை இவர் வெறுத்து வந்தார்.

ஸேவர்ஸ் காங்கரஸ்

ஸேவர்சில் காங்கரஸ் நடந்தபோது பல துருக்கிய காலாட்படைகளை அழைத்துக்கொண்டு கமால்பாஷா அவர்கள் கள் எரஸிரம் சென்று அங்கிருந்து காங்கரசுக்குப் போனார். அங்கிருந்து ஜெனரல் முஸ்தபா அவர்கள் கான்ஸ்தாந்திநோபி ளுக்கு,

> "கிரேக்கர் அர்மீனியர் இவர்களிடை நாம் இது காலை இருந்துவரும் நிலைமையைக் கவனிக்குங் கால், நான் சேனையில்சேர்ந்திருப்பதை விடத்தனியே இருந்து என் தேசத்திற்குப் பல தொண்டுகள் செய்யக் கூடுமென்று நினைக்கிறேன்"

என்று ஒரு தந்தி கொடுத்தார். இவர் அங்கு கூடிய காங்கரசில் அக்கிராசனம் வகித்தார்.

உலக யுத்தத்தின்போது காஜீ முஸ்தபா கமால்பாஷா அவர்கள் டார்டனல்சில் தீவிரமாகப் போர்புரிந்தார். பின்னர் லிமான் வான்ஸான்டர்சின் கீழ் பாலஸ்தீனில் துருக்கியப் படையைத் தலைமை வகித்து நடத்திச் சென்றார். குட் என்னும் நகரில் ஜெனரல் டவுன்ஷெண்ட் பிடிப்பதற்கு கமால் பாஷாவே காரணஸ்தரா யிருந்தார்.

சின்ன ஆசியாவிற்கு மாற்றம்

பாக்தாதை பிடிப்பதற்காக 1917-ம் வருஷம் பால்கன் ஹெயின்ஸ் என்பவர் செய்த ஏற்பாட்டைக் கமால் கண்டித்து, அக்கண்டனத்தின் அறிகுறியாக தமது வேலையை ராஜீநாமா செய்து அதனால் என்ன ஆபத்துவரும் என்பதைத் தெளிவாகப் பின்வருமாறு எழுதி அன்வர்பாஷாவிற்கு அனுப்பினார்:—

“கிரேட் பிரிட்டனையும் பிரான்சையும் பிரித்து இரண்டையும் தோற்கடிக்க முடியாது. கிரேட் பிரிட்டன் பாலஸ்தீனத்தை ஜெயித்து கிறிஸ்தவ அரசாங்கத்தை அங்கு ஸ்தாபித்து சூயஸ் வாய்க்கால், செங்கடல், எகிப்து இவைகளை தங்கள் செல்வாக்கில் கொண்டு இஸ்லாத்தின் தலைநகரான கான்ஸ்டாண்டிநோபிளை பங்கிக்துவிடுவார்கள்”

என்று தெரிவித்தார். முடிவில் கமால்பாஷா அபிப்பிராயப்படியே செய்தனரென்பது வெளிப்படை.

ஒரு வருஷத்திற்கு பிறகு அன்வர் இவரை மீண்டும் அழைத்து ஈல்டரிடம் பகுதிச்சேனையைக் கொடுத்து பாலஸ்தீனத்திற்கு அனுப்பினார்.

ஏற்கெனவே சிதைந்து போயுள்ள கான்ஸ்டாண்டி நோபிளில் நேசக் கட்சியார் வந்து புகுந்துகொண்டு விட்டபடியால், அங்கு இனி தமது தலை நகரை அமைத்துக்கொள்வதில் பயனில்லை யென்று கண்டு சின்ன ஆசியாவிற்கு காஜீ கமால் பாஷா வந்துவிட்டார்.

தேசீய இயக்கத்தைப் பலப்படுத்தியதேன்?

துருக்கி தோல்வியுற்று 1918-வருஷம் நேசக்கட்சியாரின் யுத்த நிறுத்த நிபந்தனையில் கையொப்பமிட்ட பிறகு துருக்கியில் தேசிய இயக்கம் மும்முரமாக ஆரம்பித்தது. இந்த இயக்கம் பலப்படுவதற்குச் சில காரணங்கள் உண்டு. அவையாவன:—

(1) துருக்கியில் முஸ்லிம் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களைப் பங்கிட்டு ஐரோப்பியர், கிரேக்கர் இவர்கள் ஆதீனத்தில் சிலவற்றை விட்டுவிடவேண்டுமென்று பாரிஸில் செய்யப்பட்ட தீர்மானம்.

(2) சின்ன ஆசியாவில் போதுமான இராணுவபலத்தை வைத்து அதைக்காக்க ஐரோப்பியருக்குப் பிரியமோ அல்லது சக்தியோ இல்லாதது.

(3) தோல்வியுற்ற துருக்கியின் பிரதிநிதித்துவத்தைச் சிறிதும் பெறாத கான்ஸ்டான்டிநோபிள் அரசாங்கத்தை யுத்த நிறுத்த உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டவுடனே நேச தேசத்தார் தமது செல்வாக்கின் கீழ் கொண்டு அவ்வரசாங்கத்தை அடிமைப் பொம்மைபோல ஆட்டிவைப்பது.

(4) இவைகளைக் காட்டிலும் முக்கியமாக 1919-ம் வருஷம் மே-மாதம் ஸ்மர்னாவை கிரேக்கர் கைப்பற்றி அங்கு சகிக்க முடியாத அட்டூழியங்களைச் செய்து வந்தனர்.

இந்நான்கு விஷயங்களே இளந் துருக்கியர்களின் தேசிய ஊக்கத்தை அதிகரிக்கக் காரணமாயிருந்தன.

பிரெஞ்சு துருப்புகளை முறியடித்தல்.

இதற்குப் பிறகு அடானாவில் வான்ஸான்டர்ஸின் தலைமைப் பதவியை கமால்பாஷா அடைந்தார். 1919-ம் வருஷத்தின் பிற்பகுதியில் கமால்பாஷா தமது துருப்புகளை அனத்தோலியாவிற்குள் நடத்திச் சென்று மெர்ஸியாவிற்கருகிலிருந்து பிரெஞ்சு படையை முறியடித் தோட்டினார். இவ்வெற்றி இவருக்கு இவரது எதிர்காலத்தில் பெருங் கீர்த்தியை யளித்தது.

தாபாத் பரீத் இவர் செயலைப் பல முறை கண்டித்தும் கூட இவருக்கு சமது வேலையில் மிக்க நல்ல நம்பிக்கையிருந் தது. அங்கோரா செல்ல ஸ்மர்னாவைக் கிரேக்கர் தம் வசம் கொண்டது முதல் சின்ன ஆசியா முழுவதும் கமால்பாஷா வின் உதவியை வேண்டி நின்றது.

பின்னர் 1919 வருஷம் வேனிற்காலத்தில் அங்கோரா வில் தேசிய அசெம்பிளிச் சபையைக் கூட்டி கான்ஸ்டாண்டி நோபிளில் ஸுல்தான் ஆட்சிக்குப் போட்டியாக ஒரு சர்க் காரை ஸ்தாபித்தார். கான்ஸ்டாண்டி நோபிளிலுள்ள ஸுல் தானின் ஆட்சிகள் சிறு தொகுதி நாடுகளுக்குக் கட்டுப்பட்ட தெனக் கருதி வந்தார். ஆகஸ்டு மாதத்தில் அங்கோராவில் ஒரு சுயேச்சையான குடியரசாகப் பகிரங்கப் பிரகடனம் செய் வதாகப் பயமுறுத்தினார். ஆனால் இது விஷயமாகச் சம ரஸம் ஏற்பட்டுவிட்டதால் இந்த உத்தேசம் நிறுத்தப்பட்டது. என்றாலும் கான்ஸ்டான்டிநோபிளை பிரிட்டிஷ் கைப்பற்றிய தால் நிலைமை வெகு சிக்கலாகிவிட்டது.

அயல் நாடுகளுடன் ஒப்பந்தம்.

1920 வருஷத்திய ஸலிஹ்பாஷா மந்திரிச் சபை இராஜி நாமா செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டதால், ஸான் ரிமோ மகாநாட்டிற்குச் சற்று முன் கமால்பாஷா அவர் கள் அனத்தோலியாவில், தன்னைத் தானே பிரதம வஸீராகப் பிரகடனம் செய்துகொண்டார். உடனே அண்டை அய லிலிருந்த சின்னஞ் சிறு நாடுகளனைத்தும் கமால்பாஷாவுடன் ஒப்பந்தம் பேசிக்கொண்டன. கமால் பாஷாவும் சோவியத் ருஷ்யாவுடன் நேச உறவு பூண்டு சமரஸம் செய்து கொண் டார்.

கமால் பாஷாவிற்கும், சோவியத்திற்கும் 1920 வருஷம் நவம்பரில் ஒப்பந்தமேற்பட்ட பொழுது ருஷ்யத் தலைவர்கள் கமால் பாஷாவைத் தங்களிஷ்டப்போல் ஆட்டி வைத்துவிட லாமெனப் பகற்கனவு கண்டு வந்தனர். ஆனால், அவர்களின் எண்ணம் கமால்பாஷாவிடம் பலியாமற் போய்விட்டது. இவ்வுடன்படிக்கைக்குப் பிறகு ஆர்மீனியாவை சோவியத் ருஷ்யாவின் குடியரசாகச் செய்ய ருஷ்ய சர்க்கார் கருதியது. இதனையறியாத கமால்பாஷா ஆர்மீனிய சர்க்காருக்கு ஒரு இறுதி எச்சரிக்கை விடுத்து, அந்தசர்க்கார் துருக்கியின்கீழ்

னைக்கு மீறி நடக்குமாயின், அதையே யுத்தத்தின் இறுதிச்சச ரிக்கையாகக் கருதும்படி அதில் குறிப்பிட்டிருந்தார். 1921-ஆம் டிசம்பர் மீ 2-க்வ அர்மீனிய சர்க்காருக்கும் கமால்பாஷாவிற்கும் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. இதனால் துருக்கியரின் ஆதிக்கம் அர்மீனியாவிலும் வேரூன்றி விட்டது. அதே சமயத்தில் துருக்கியர் கார்கியன் பிரதேசத்தில் புகுந்து பாட்டும் என்ற ஜில்லாவைக் கைப்பற்றினர். இந்த நகரம் கருங்கடலில் காக்கேஸியர் துறைமுகத்தில் ஒரு முக்கிய பட்டினமாகும்.

முடிவாக 1921-ம் ஆண்டில் பிரான்ஸ், கமால்பாஷாவுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டது. அப்போது கமால்பாஷாவின் சர்க்கார் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

இந்த சமயத்தில் அவர் 1,00,000 பேர் கொண்ட ஒரு பெரும்படையைத் திரட்டியிருந்தார். 1922 ம் ஆம் வஸந்த காலத்தில் பிரிட்டிஷ் நேசதேசங்களின் விருப்பத்திற்கு மாறாக அவர்களை அலட்சியம் செய்து கமால்பாஷா அவர்கள் தமது பெரும் படையுடன் கிரேக்கர்களை எதிர்த்து ஸ்மர்னாவை ஜெயித்துக் கைப்பற்றினார்

கமாலின் ஆட்சிக்குப்பின் முதல் யுத்தம் இதுவே. இதில் கமால்பாஷா அடைந்த வெற்றியும், கமால் சேனைகளும் தளபதிகளும் இந்த யுத்தத்தில் காட்டிய வீர தீர பராக்கிரம செயல்களும் ஐரோப்பா வல்லரசுகளை மட்டுமின்றி அமெரிக்கா முதலிய நாடுகளையும் திடுக்கிடச்செய்து விட்டன. துருக்கி இழந்த கீர்த்தியையும், பலத்தையும் திரும்பப் பெற கமால் பாஷா செய்துவிடுவாரென்ற அச்சமும் அவர்களுக்கேற்பட்டது.

அது சமயம் கான்ஸ்டாண்டி நோபிளில் சிறிது காலம் அமெரிக்க ஸ்தானிகராக இருந்து சில குற்றம் இழைத்த காரணத்தால் துருக்கியால் நாடு கடத்தப்பட்ட மாஜி ஸ்தானிகர் ஐரோப்பா வல்லரசுகளுக்கு ஒரு அறிக்கை வெளியிட்டார். அதில்,

'துருக்கியரசாங்கத்தை ஒழிக்க வேண்டுமென்ற ஐரோப்பா அரசர்களின் நீண்டகால நோக்கம் மகாயுத்தத்திற்குப் பின் நிறைவேறி விட்டதாகக் கருதப்பட்டது.

ஆனால் கான்ஸ்டான்டிநோபிளை விட்டும் வெளியில் ஓடி விட்ட கமால் இளந் துருக்கிக் கோஷ்டியினர் இது பொழுது செய்துவரும் தீவிர முயற்சியானது, துருக்கி இழந்த பலத்தையும், கீர்த்தியையும் திரும்ப அடையச் செய்துவிடும் என்ற அச்சம் ஏற்படுகிறது ஆகையால், இப்பொழுதே எல்லா ஐரோப்பிய அரசர்களும் கமால் துருக்கிபராசாங்கத்தை எதிர்த்து தலையெடுக்காமல் நசுக்கி விட வேண்டும். இன்றேல் ஐரோப்பாவிற்குப் பிற்காலத்தில் பெரும் அபாயமே நேரிடும்."

என்று குறிப்பிட்டிருக்கிறார். அவரது இந்த அபிப்பிராயத்தின் கருத்து எதுவாயிருப்பினும் சரி. துருக்கி கீர்த்தியும் பலமும் அவர் கூறியதுபோல் கமால் பாஷாவின் ஆட்சிகாலத்தில் அடைந்ததென்பது உண்மை.

1922-ம் வருஷம் ஜூலை மாதத்தில் உர்மா ஏரிக்குப் பக்கத்திலுள்ள குன்னிஸ்பூஜ் புர்லாக் என்ற இடத்தில் காஜி முஸ்தபா கமால் பாஷாவும், அன்வர் பாஷாவும் ஒரு இரகசிய ஒப்பந்தம் செய்துகொண்டனர். அவ்வொப்பந்தத்தில் இருவரும் சேர்ந்து இஸ்லாம் மதத்தை பலப்படுத்த வேண்டிய முயற்சிகளில் உழைப்பதென்று காணப்பட்டுள்ளது. முஸ்தபா கமால் பாஷா ஸோவியத்காரர்களுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தப்படி நடந்து கொள்வதென்றும், அன்வர் பாஷா குர்திஸ்தான், பலுச்சிஸ்தான் முதலிய கீழ் பிரதேசத்திலிருந்துகொண்டு போல்ஷிவிக்கரை எதிர்த்துப் போர் புரிவதென்றும் ஒப்புக்கொண்டனர்.

'காஜி' பட்டமளிப்பு.

பின்னர் கமால்பாஷா அவர்கள் டார்டனல்ஸுக்கு முன்னேறிச் சென்று கிரீஸையும், அதன் ஆதிக்கத்தின் கீழிருந்த அயல் நாடுகளையும் 1922-வருஷம் ஜூலை-மீ 24-வ லாஸேன் உடன்படிக்கையை ஒப்புக்கொள்ளும்படி செய்தார். இவ்வுடன்படிக்கையால் மரீட்ஸா வரையில் அட்ரியா நோபிள் உட்பட திரேஸ் முழுவதும் துருக்கியின் கீழ் வந்தது. இந்த வெற்றியின் காரணமாக கமால் பாஷாவிற்கு 'காஜி' என்ற பட்டம் வழங்கப்பட்டது. 1922-ம் வருஷம் நவம்பர்-மீ 1-வயன்று அங்கோரா அஸெம்பிளிச் சபையானது ஸுல்தான் ஆட்சியை ரத்து செய்துவிட்டது. ஐந்தாவது முஹம்மத் ஒரு பிரிட்டிஷ் யுத்தக் கப்பலில் பிடிபட்டார். இதிலிருந்து

ஊஸ்மானிய பரம்பரையின் ஆட்சி துருக்கியில் இல்லாதொழிந்தது.

எதற்காக கமால் யுத்தம் செய்கிறார்? ஸ்தாம்பூலில் கைது செய்யப்பட்டு சல்டிகா கியோஸில் மூன்று மாதம் சிறையிலிருந்து, டமாஸ்கஸுக்குக் கடத்தப்பட்டு அங்கிருந்து சலோனிகாவுக்கு வந்த கமால்தான் டார்டனல்ஸைக் காப்பாற்றியவர். ருஷிய யுத்தத்தில் நின்று ஜெயம் பெற்றவர். மூன்று தடவை வேலையைவிட்டு மூன்று தடவை உத்தியோகத்தில் புகுந்தவர். இப்படிக்கெல்லாம் அவர் கஷ்டப்பட்டு, மன்றாடி, திண்டாடியதற்குக் காரணம் என்ன? சுதந்திரத்தில் அவருக்குள்ள ஆர்வமும், ஆவேசமுமே. தேச சுதந்தர விஷயத்தில அவருக்குள்ள அவா இஸ்லாமிய இராஜியத்தை பலப்படுத்த வேண்டுமென்ற ஊக்கம்; இவைகளே காரணமாகும்

கமாலின் பேராவல்

ஜினிவா மகாநாட்டு காலத்திலும் அதற்கு முன்னும், பிற நாடுகளுக்குச் சமத்துவமான நிலையில் இருக்கவேண்டுமென்ற உணர்ச்சியும் ஆக்கிரமும் அவருக்கு அதிகம் பொங்கிக் கொண்டிருக்கிறது 1907ம் வருடம் அப்துல் ஹமீத்கான் அவர்கள் இங்கிலாந்துடன் பேசி முடிவு செய்து கொண்டதினால் துருக்கி இழந்த சமத்துவத்தை மீண்டும் பெறவேண்டுமென்ற துடிப்பு அவர் மனதில் குடி கொண்டிருந்தது.

கமால் இதுகாலை தலைவராகிவிட்டார். அவர் தமது தேசத்திற்கு மட்டும் இப்பொழுது தலைவராயில்லை. கான்ஸ்டாண்டி நோபிளுக்கும் காபூலுக்கு மிடையிலுள்ள சுன்னி முஸ்லிம் சமூகத்தாருக்கு அவர் தலைவராகிவிட்டார்.

குடியாட்சி ஸ்தாபிதமும், விவாகமும்.

1923-ம் வருடம் அக்டோபர் மீ 29-வ தேசிய அசெம்பிளிச் சபை துருக்கியை குடியரசாகப் பிரகடனம் செய்து காஜி மூஸ்தபா கமால்பாஷாவை அதன் முதல் தலைவராகத் தெரிந்தெடுத்தது. அன்று முதல் இன்று வரை துருக்கி தேசமானது கமால் பாஷாவின தலைமையின் கீழ் குடியரசாகவே இருந்து வருகிறது.

யுத்தத்திற்குப் பிறகு காஜி முஸ்தபா கமால்பாஷா அவர்கள், ஸமர்னா நகரப் பிரபல வியாபாரியான ஒரு பெரும் செல்வந்தரின் குமாரத்தி லத்திபே கானமை விவாகம் செய்து கொண்டார். அந்த வியாபாரி தனது குமாரத்திக்கு 1,50,000 பவுன் சீதனமாகக் கொடுத்தார். கமால் பாஷா வின் மனைவியான லத்திபேகானம் இங்கிலாந்தில் கல்வி பயின்று, துருக்கியப் பெண்கள் இயக்கத்தைத் தலைமை வகித்து நடத்திவந்தார். கமால்பாஷா அவர்கள் 1925-ம் ௵ ஆகஸ்டு-மீ தமது மனைவியை விவாகரத்துச்செய்தார். அவர் 1926 ௵ ஜூலையில் தனது உயிருக்கு ஹானி விளைவிக்கக் கூடிய ஒரு சதிக் கூட்டத்தைக் கண்டு பிடித்து அச்சதியில் சம்பந்தப் பட்ட 13 பேருக்கு மரண தண்டனை விதித்தார். இவ்வாறு மரண தண்டனை யடைந்தவர்களில் சிலர் மாஜி மந்திரிகளாவர்; அவர் துர்கியர்கள் கமால் ஆட்சிக்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்த புரட்சியையும் ஒழித்து விட்டார்.

1927 ௵ அக்டோபர் மாதத்தில், தொடர்ந்து 6 நாட்கள் அவர் ஒரு பிரசங்கம் செய்தார். அப்பிரசங்கத்தில் துருக்கி குடியரசின் சேவைகளையும், தமது வேலைகளையும் விவரித்துக் கூறினார். இப்பிரசங்கத்திற்குப் பிறகு காஜி முஸ்தபா கமால் பாஷா அவர்கள் மீண்டும் நான்கு வருஷ காலத்திற்கு ஏகமனதாகத் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். இந்த ஏகமனதான அபிப்பிராயத்தின் காரணம், அவர் தமக்குப் போட்டியாகத் தோன்றிய எல்லாக் கட்சிகளையும் நிலவச் செய்யாமல் ஒழித்து விட்டதே யாகும். அவர் தமது பிரசங்கத்தினிடையே 1919 ௵த்தில் துருக்கியத் தேச இராஜ விஸ்வாசிகள் தங்கள் நாட்டை ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பிற்குள்ளாகச் செய்து விடவேண்டுமென்று பேசிக்கொண்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

காஜி முஸ்தபா கமால் பாஷாவின் தேக நிலை 1928 ௵ பிப்ரவரி மாதத்தில் மிகவும் க்ஷீணதசை யடைந்தது. அவர் இந்த சமயம் பிரக்ஞையற்று வீதியில் விழுந்து விட்டாரென்றும் ஒரு செய்தியும் வெளியாகியது.

1930 ௵ல் கமால் பாஷா அவர்கள் ஸோவியத் ஆட்சி முறையைக் கடைபிடிக்கப் பிரியப்படாததால் அவர் கட்சி வாதத்தை ஆதரித்தார். ஆனால் 1931 ஏப்ரலில் கடை

பெற்ற தேர்தலில் தேசிய அசெம்பிளிச் சபைக்கு 19 சுயேச்சைக் கட்சியினரும், 287 சர்க்கார் கட்சியினரும் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

கமால்பாஷா அவர்கள் நாட்டில் பிச்சைக்காரர்கள் தொல்லையை ஒழித்தார். பைத்தியம், குணமாற்றம் முதலியவற்றைக் கண்டு ஒருவரும் பரிகாசம் செய்யக்கூடாதென அவர் உத்திரவு பிறப்பித்தார். ஒவ்வொரு ஆண்களும், பெண்களும் கலியாணத்திற்கு முன்பு தேக திடகாத்திர ஆரோக்கிய நற்சாட்சிப் பத்திரம் பெற வேண்டுமாக உத்திரவு செய்தார்.

விசேஷ குணங்கள்.

காஜி முஸ்தபா கமால் பாஷாவைப் பற்றி மிஸ்டர் ராபர்ட்டுடன் என்பவர் கீழ் வருமாறு எழுதுகிறார்:—

முஸ்தபா கமால் மிக்க மத ஊக்கமுடையவர்.

அங்கோராவில் முஸ்தபா கமால்பஷா மிக்க செல்வாக்கு பெற்றிருக்கிறார். இவர் தான் பெரியவரென்ற கர்வம் கொள்வதில்லை. ஜனங்களின் பூரண பிரதிநிதித்துவம் பெற்ற சபையாகவே அங்கோரசபை நடைபெறுகிறது. ஜனநாயகம் என்பதையே உருக்கொண்டு வந்தவர். அங்கோரா ஆபத்திலிருந்தபோது முஸ்தபா கமால் அவர்கள் தமது சபா நாயகப் பதவியை ராஜிநாமாச் செய்து உடனே சேனையில் சேர்ந்து சேவை செய்து அங்கோராவைக் காப்பாற்ற முன் வந்தார். இவருடைய குணம், சக்தி, ராஜதந்திரம், இராணுவ தந்திரம் இவைகளில் நிகரற்றவர். தமது தேசப்பண்டை நாகரிகத்தை மீண்டும் பெற இவர் செய்யும் முயற்சி கௌரவிக்கக் கூடியதே."

அழகுபடுத்த 12 லக்ஷம்.

முகப்பூச்சுகள் கூந்தல் தைலங்கள் முதலிய பலவகையான அழகுபடுத்தும் பொருள்களுக்குமாக இந்தியா வருஷந்தோறும் 12 லட்சம் ரூபாய் செலவிடுகிறது. இந்தச் சாமான்களெல்லாம், வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. அழகுபடுத்தும் ஆடை வகையறாக்களை அமெரிக்காவிலிருந்து 26 லட்சம் ரூபாய்க்கும் கிரேட்பிரிட்டனிலிருந்து 9 லட்சம் ரூபாய்க்கும் இந்தியா இறக்குமதி செய்கிறது.

புத்தக நிலையங்கள்.

(மெயில் பத்திரிகையில் P. S. J. வெல்ஸ்போர்டு F. G. I. S. அவர்களால் எழுதப்பட்டது. மொ—ர். ஜெ. க. வேலன்)

[மேல் நாட்டாரால் 1877-ம் ஆண்டு ஒரு சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. அதன் நோக்கம் உலகில் பல பாகங்களில் புத்தகாலயங்களை (Libraries) நடத்துபவர்களை ஒன்று சேர்த்து அதன் மூலம் எல்லா புத்தகாலயங்களையும் நல்ல முறையில் வேலை செய்யும்படி ஏற்பாடு செய்வதாகும். அது தற்சமயம் 5500 அங்கத்தினர்களை பெற்றுள்ளது. இந்த சங்கத்தில் சில ஆண்டுகள் அமைச்சராய் இருந்து காரியங்களை செய்து வந்தவர்தான் இக்கட்டுரையை எழுதும் மிஸ்டர் வெல்ஸ் போர்டு என்பதை வாசகர்களுக்கு அறிவிக்கவே இதை எழுதியுள்ளோம். மேலும் மேற்படி சங்கத்தில் புத்காலயங்களும் புத்தகாலய காரியங்களில் அக்கரையுடையவர்களும் குறைந்தசந்தாவில் அங்கத்தினர்களாய் சேர்ந்து அது சம்பந்தமான தொண்டு செய்யலாம்)

பல நூற்றாண்டுகளாய் மக்கள் படிக்க எழுத கற்றுக் கொள்ளும செய்கை குறைந்தே இருந்துள்ளது. காரணம் அக்கால மக்கள் படிக்கக் கற்றுக்கொள்ளவதும் எழுத பழகுவதும் அவசியமில்லை என்று கருதியதோடு ஆபத்து—என்றும் நினைத்தார்கள். ஆனால் அந்த நிலை வெகுநாள் நீடித்திருக்கவில்லை. தற்சமயம் மக்கள் மேற்படி எழுதப்படிக்கத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற நிலை மாறி புத்தகங்களின் அவசியத்தை உணர ஆரம்பித்துவிட்டார்கள். ஆகவே ஒவ்வொரு நாடும் மக்கள் நன்மையைக் கருதி ஒவ்வொருவிதமான புத்தகாலய ஏற்பாடுகளை செய்து வருகின்றன. இரண்டு தனி மனிதர்கள் மேற்படி புத்தகாலய வேலையை மக்கள் நிலைக்குத்தக்கவாறு அவர்களின் நோக்கம் போல் இரண்டு மாறுபட்ட வழிகளில் மேற்படி வேலையைச் செய்வதுண்டு. ஆக புத்தகாலய வேலையானது சுதந்திர மார்க்கத்தில் அதிக தொடர்புடையதாய் பிரதி பலிக்கிறது. தற்சமயம் நடத்தப்

படிம் புத்தகாலயங்கள் பலவழிகளில் வேலை செய்கிறது. சில நாடுகளில் அல்லது சில புத்தகாலயங்களில் பொழுது போக்குக்காக கற்பனை கதைகள் போன்ற நூல்களைக் கொண்ட புத்தகாலயங்களும் வேறு சில நாடுகளில் அல்லது புத்தக நிலையங்களில் கல்வி அறிவை வளர்ப்பதும், சாஸ்திரிய அறிவைப்புகட்டுவதும் ஆன ஆங்காங்குள்ள மக்கள் நிலைக்கு தக்கவாறு புத்தக நிலயங்கள் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

சில நாடுகளில் உள்ள புத்தகாலய நிர்வாகிகள் ஒரு கட்டுப்பாடான திட்டங்களின் மூலம் புத்தகங்களை படிக்க ஏற்பாடு செய்து வருகிறார்கள். இப்படிச் செய்வதின் மூலம் மக்கள் எந்த ஒரு பொருளைப்பற்றியும் ஆரம்பம் முதல் இறுதி வரை அறிந்துகொள்ள முடிகிறது. இல்லையானால் மக்கள் அவர்கள் இஷ்டம் போல் அந்த சமயம் ஏற்படும் மனோ நிலைக்கு தக்கவாறு அங்கு கொஞ்சம் இங்கு கொஞ்சம்தான் தெரிந்துகொள்ளமுடியும். முன் சொன்ன வகையைத்தான் அறிஞர்கள் அதிகம் விரும்புவார்கள். ஆனால் பிரிட்டிஷ் மக்கள் பின் சொன்னமாதிரி எந்த ஒரு பொருளையும் ஆரம்பம் முதல் கடைசிவரை படித்துணர்வதில்லை. இந்த மனப்போக்குள்ளவர்களை சரியான வரிசையில் புத்தகங்களை படிக்கும்படி ஆலோசனைகள் சொல்லவும் ஏராளமான ஆட்கள் புத்தகாலயங்களில் இருக்கிறார்கள். ஆக இங்கிலாந்தில் உள்ள புத்தகாலயங்களையும் அதை நிர்வாகம் செய்யும் அமைப்புகளையும் பற்றி சற்று சொல்ல ஆசைப்படுகிறோம்.

18-ம் நூற்றாண்டின் இறுதியில் இங்கிலாந்தில் வேலை செய்யும் மக்களிடம் கவலைகொண்ட அனேகர் இருந்து வந்தார்கள். அவர்கள் தங்கள் சொந்த முறையில் மேற்படி பாட்டாளி மக்களான ஏழைகளுக்குக்கல்வியறிவை உண்டாக்கு வான் வேண்டி ஆங்காங்கே சில சிறிய பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தினார்கள். சில நாட்களில் மேற்படி பள்ளிக்கூடங்களுக்கு வந்து கல்வி பயிலும் மக்களின் எண்ணிக்கை அதிகப்பட்டு வந்தது. இதைக்கண்ட சில பொது ஸ்தாபனங்கள் மேற்படி பள்ளிக்கூடங்களின் அமைப்பாளர்களை ஒன்று சேர்த்து பள்ளிக்கூடங்களின் கட்டடங்களை அமைப்பதற்கென பொருள் திரட்டினார்கள். இங்கிலாந்து மக்கள் எப்பொழுதும் புது புது கிளர்ச்சிகளை உண்டாக்குவதற்கு பல வாறான இயக்கங்களை தோற்றுவிப்பார்கள். அப்படி தோற்றுவிக்கப்படும் இயக்கங்களுக்கு பலவாறான இடைஞ்சல்

களும் செய்ய சிலர் உண்டாவது ஆச்சரியமில்லை. இந்த இடைஞ்சல்களை எல்லாம் வெகு சாமர்த்தியமாய் சமாளித்துக்கொண்டு மேற்படி இயக்கங்கள் மக்களுக்கு ஏதோ ஒரு வழியில் நன்மையைத்தான் உண்டாக்கும். அப்படிப்பட்ட இயக்கங்களை அரசாங்கம் கவனித்து அவைகளுக்கு உதவி செய்ய முன்வரும்.

ஆனால் அப்படி உதவி செய்ய முன் வரும் அரசாங்கம் நிர்வாக பொறுப்புகளை ஆங்காங்குள்ள மக்களிடமே ஒப்படைத்து விடுவது வழக்கம் இதே போன்று இந்த சிறு பள்ளிக்கூடங்களைக்கவனித்து வந்த ஆங்கிலேய அரசாங்கம் 1833-ம் வருடம் ஷை பள்ளிக்கூடங்களைக் கட்டுவதற்கென சிறிது பணம் கொடுத்தார்கள். இந்த முறையில் படிக்கக் கற்ற மக்கள் பள்ளிக்கூடங்களின் தொடர்பு நீங்கிய பின் படிப்பதற்கு புத்தகங்களும் பத்திரிகைகளும் எப்படிக் கிடைக்கும் என்ற பிரச்சினையில் ஆழ்ந்தார்கள். இந்த யோசனைகள் காலக்கிரமத்தில் தொழிலாளரிடையே சில சிறிய சங்கங்களை அமைக்கத் தூண்டியது. இப்படி அமைக்கப்பட்ட சங்கங்களுக்கு அதன் அங்கத்தினர்கள் தங்கள் தங்களால் முடிந்த சந்தா தொகையைக் கொடுத்து அதன் மூலம் சிறிய இடங்களை அமர்த்திக்கொண்டார்கள். இடம் ஏற்பட்டவுடன் தங்கள் அபிப்பிராயங்களை விவாதிப்பதற்கும் படிப்பதற்கும் தேவையான புத்தகங்களையும் பத்திரிகைகளையும் வாங்கி உபயோகிக்க முன் வந்தார்கள். இந்தத் தொண்டை முதல் முதலில் செய்ய முன் வந்தவர்கள் யந்திரங்களில் சரீர வேலை (Mechanics) செய்பவர்களாகும்.

இங்கிலாந்தில் இந்தப் புத்தகாலயங்களுக்குச்செலவு செய்யப்படும் பொருள் உதவி இரண்டுவகையில் நடைபெறுகிறது. ஒன்று மக்களிடமிருந்து வரியாக வசூல் செய்து சர்க்காராலேயே நிர்வகிக்கப்படுவது. மற்றொன்று. ஆங்காங்குள்ள மக்களின் நிலம் வீடு இவைகளின் பொருமானத்தில் ஒரு சதவிகிதத்தை வசூல் செய்து அந்த ஸ்தல நிர்வாகிகளால் நிர்வகிக்கப்படுவது. 1850-ம் வருடம் பார்லிமெண்டார், மக்கள் விரும்பினால், நகரங்களில் உள்ள பொது மக்களின் தாவர சொத்துக்களின் மதிப்பில் பவுன் ஒன்றுக்கு அரை பென்னி வீதம் (இரண்டுக்கு சற்று அதிகமான சதவிகிதம். மொ—ர்) வசூல் செய்து புத்தகாலயங்களை அமைக்க சட்டம் செய்

தார்கள். இதை அநேக நகரங்கள் உடனடியாக பயன்படுத்திக்கொள்ளவில்லை. ஏனென்றால் மக்களின் பொருளாதார நிலை ஷ தொகையைக்கொடுக்க முடியாதவாறு இருந்தது. அப்படி இருந்தும் சில வருடங்களில் ஷ வரி விகிதம் இரண்டு பங்கு செய்யப்பட்டது. இதனால் புத்தகாலய வேலை மிக மெதுவாய் வளர வேண்டியிருந்தது. ஆனால் அந்தப் பொருளாதார மந்தம் 1919-ல் நீங்க ஆரம்பித்தது. ஷ பொருளாதார மந்தம் நீங்கியபின் ஏற்பட்ட பொருள் சேமிப்பின் பயனாய் புத்தகாலய வேலைகள் வேகமாய் முன்னேறியதின் பயன் தற்சமயம் 1 0-க்கு 97 மக்களுக்கு புத்தகாலய வசதியைச் செய்துள்ளது.

பொதுவான புத்தகாலய நிர்வாகமானது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு கழகத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. புத்தகாலயங்களின் நலனை வேண்டி புத்தகாலய வேலைகளில் அனுபோகமுள்ள சிலரை ஷ கழகத்தில் அங்கத்தினராய்ச் சேர்த்துக்கொள்வார்கள். ஆக புத்தகாலயங்களின் பாதுகாப்புகளை ஷ கழகம் கவனித்துக்கொள்ளும். புத்தகாலய அதிகாரி (Librarian) புத்தகாலய நிர்வாகங்களையும் ஷ நிர்வாக சம்பந்தமாய் மேலே சொன்ன கழகத்தாருக்கு அவசியமான யோசனைகளையும் சொல்லுவார். உதாரணமாக புத்தகாலய நிர்வாகிகள் ஏதாவது குறிப்பிட்ட புத்தகங்கள் வாங்க வேண்டும் என்று விரும்பினால் மேற்படி புத்தகாலயக் கழகத்தார் தாங்கள் மக்களின் பிரதிநிதிகள் என்ற முறையில் அப்புத்தகம் தேவைதானா என்பதை ஒவ்வொருவரும் அவரவர்களுடைய மக்களின் உணர்ச்சியை ஆராய்ந்து அவசியம் என்று பட்டால் வாங்க புத்தகாலய அதிகாரியை அனுமதிப்பார்கள். புத்தகங்கள் வாங்குவது மக்களின் உணர்ச்சிக்குத்தக்கவாறும் பண இருப்புக்குத் தக்கவாறும் விகிதாச்சார முறைப்படி வாங்குவார்கள்.

புத்தகங்கள் பொருள்வாரியாக அலமாரிகளில் மக்கள் சுலுவில் படித்தறிந்து கொள்ளும் முறையில் அடுக்கப்பட்டிருக்கும். புத்தகங்களை வீட்டிற்கு எடுத்துச் சென்று படிக்கும் ஒவ்வொருவருக்கும் ஒரு டிக்கட்டோ அல்லது இரண்டு டிக்கட்டுகளோ புத்தகாலயத்தாரால் கொடுக்கப்பட்டிருக்கும். மேற்படியார்கள் தங்களுக்குத் தேவையான புத்தகங்களை அவர்களுக்கு ஒழிந்த நேரங்களில் தேர்ந்தெடுத்து வைத்திருப்பார்கள். அப்படி புத்தகங்களை ஆராய்ந்து தேர்ந்தெ

டுக்க அலமாரிகளை யொட்டி மேஜைகளும் நாற்காலிகளும் போடப்பட்டிருக்கும். அவர்கள் தங்களுக்குத் தேவையான புத்தகத்தையோ அல்லது புத்தகங்களையோ அங்குள்ள அட்டண்டரிடம் எடுத்துச் செல்லுவார்கள். அவர் மேற்படி ஒவ்வொரு புத்தகத்திலும் இருக்கும் ஒவ்வொரு டிக்கட்டையும் எடுத்து மேற்படி புத்தகத்தை எடுத்துச் செல்பவரின் டிக்கட்டுடன் சேர்த்து வைத்துக்கொள்ளுவார். மேற்படியார் புத்தகங்களை திருப்பிக் கொடுக்கும் பொழுது அவரது டிக்கட்டுகள் திருப்பிக் கொடுக்கப்படுவதுடன் மேற்படி புத்தகங்களின் டிக்கட்டுகள் அந்தந்த புத்தகங்களில் வைக்கப்பட்டு அதன் இடத்தில் வைக்கப்படும்.

புத்தகாலய வாசகர்களுக்கு புத்தகங்கள் சம்பந்தமாய் யோசனைகள் சொல்ல உதவியாளர்கள் இருப்பார்கள். அவர்கள் புத்தகாலயங்களில் உள்ள புத்தகங்களைப் பற்றியும் மற்றவர்களால் எடுத்துச் செல்லப்பட்டிருக்கும் புத்தகங்களைப் பற்றியும் சொல்லுவார்கள். ஆனால் இவர்கள் வாசகர்கள் விரும்பினால் ஒழிய தாங்களாக வாசகர்களை அணுக மாட்டார்கள். இத்துடன் பயிற்சி பெற்ற உதவியாளர் (Trained Assistants) அனேகர் உண்டு. இவர்கள் வாசகர்களின் சந்தேகங்களுக்கு பதில் சொல்வதும் அவர்கள் விரும்பும் பொருள் பற்றிய புத்தகங்கள் எந்த பாகத்தில் இருக்கின்றன என்று சொல்வதும் இவர்களது வேலைகளாகும்.

இவை மட்டும் அல்லாது புத்தகாலயங்களில் டெலிபோன் வசதிகளும் செய்யப்பட்டுள்ளது. பெரிய நகரங்களில் பெரிய தொழிற்சாலைகளில் வியாபார சம்பந்தமாயும், தொழில்கள் சமபந்தமாயும் பல புத்தகங்கள் ஒன்று சேர்க்கப்பட்ட தனித்த இலாக்காக்கள் மேற்படி தொழிற்சாலைகளுடன் இணைக்கப்பட்டிருக்கும். மேல்சொன்ன தொழிற்சாலைகளில் உள்ள மேற்படி தனி இலாக்காக்களுக்கு இந்த டெலிபோன் வசதி அதிக பயன்பட்டு வருகிறது. அந்நாடுகளில் உள்ள எல்லா புத்தகாலயங்களிலும் சிறு குழந்தைகளுக்கென தனித்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சில புத்தகாலயங்களில் சங்கீத சம்பந்தமாயும் படங்கள் சம்பந்தமாயும் அதிகம் சேகரித்து வாசகர்களுக்கு உதவுகிறார்கள். இன்னும் சில இடங்களில் குருடர்கள் கல்வி பயிலவும் படிக்கவும் அவர்களுக்கென ஏற்பட்டுள்ள புத்தகங்களையும் புத்தகாலயங்களின் மூலம் பரப்பி வருகிறார்கள். அனேகபுத்த

காலயங்களில் பெரிய பெரிய பிரசாரக் கூட்டங்கள் உண்டு. அங்கு வயதானவர்களுக்குப் படிப்பு சொல்லிக் கொடுக்கப்படுகிறது.

வாக்கு வாதங்கள் நிகழ்த்தப்படுகின்றன. ரேடியோ மூலம் செய்திகளைக் கேட்டு அது சம்பந்தமாய் ஒருவருக்கொருவர் விவாதிக்கக்கூட்டம் கூட்டமாய் உட்கார வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பழங்கால சிற்பங்கள், கலை, சுகாதாரம் இதுபோன்ற மற்ற பொருள்கள் சம்பந்தமாய் நிபுணர்களைக் கொண்டு உபன்யாசங்கள் செய்யப்படுகின்றன. இவைகள் மூலம் மக்களின் மனம் புத்தகங்களில் இழுக்கப்படும்படி புத்தக அலமாரிகளையொட்டி மக்கள் உட்கார்ந்து மேற்சொன்ன பல காரியங்களில் ஈடுபடும்படி ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

இன்னும் வாசகசாலைகளுக்கு வந்து புத்தகங்களை எடுத்துச் செல்ல முடியாதவர்களுக்கும் புத்தகங்கள் கிடைக்கும்படியும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன, உதாரணமாக வியாதியால் ஆஸ்பத்திரியில் இருப்பவர்களுக்கு அவர்கள் நோய் நீக்கத்திற்குப்பயன்படும் புத்தகங்களும் சிறைவாசத்தில் இருப்பவர்களுக்கு விடுதலை அடைந்த உடன் நன்னடக்கையுள்ள பிரஜையாக நடந்துகொள்ள போதிக்கும் புத்தகங்களையும் கொடுத்து வருகிறார்கள்.

பெரிய நகரங்களில் சாதாரணமாய் ஒரு பெரிய புத்தகாலயமும் அந்நகரத்தின் மற்றய பாகங்களில் அதன் விஸ்தீரணத்திற்குத்தக்கவாறு கிளை புத்தகாலயங்களும் இருக்கும். கிளை புத்தக நிலையங்கள் புத்தகங்களைக்கொடுத்து வாங்கவும் சிறுவர்களுக்கான வசதிகளை செய்வதிலுந்தான் அதிகம் வேலை செய்யும். புத்தகங்கள் சேகரிப்பது பெரிதும் ஷை பெரிய புத்தகாலயத்தைச் சேர்ந்ததாகும். கிராமம் முதலிய இடங்களில் வசிக்கும் மக்களுக்கு வேறு விதமான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 20000 மக்களுக்குக் குறைந்த நகரங்களில் சரியாக அமைக்கப்பட்ட புத்தகாலயங்கள் ஏற்படுத்துவது தான் முடிந்த காரியம் என்று நம்பப்படுகிறது. அந்த ஜனத்தொகையில்லாத இடங்களில் வேறு விதமாக அந்தந்த ஸ்தலங்களில் தேர்ந்தெடுக்கப்படும் கழகங்கள் அந்த வேலைகளைச் செய்கின்றன. அதாவது சிறிய நகரங்களில் பெரிய நகரங்களில் உள்ள கிளை புத்தக நிலையங்களைப் போல் ஓர் இடம் ஏற்படுத்தப்படும்.

அவை குறைவான நிர்வாகஸ்தர்களைக் கொண்டதாய் இருக்கும். இன்னும் பெரிய கிராமங்களில் ஒரு அறையில் தான் புத்தகாலயம் ஏற்படுத்தப்படும். சிறிய கிராமங்களில் 50 முதல் 500 புத்தகங்களையுடைய பெட்டிகள் மூலம் புத்தகாலய வேலைகள் நடைபெறும். மேற்படி சிறிய கிராமங்களில் புத்தகங்களைக் கொடுத்து வாங்குவது வாரத்தில் குறிப்பிட்ட ஒரு நாளிலோ அல்லது இரண்டு நாளிலோதான் நடைபெறும். இந்த இடங்களில் உள்ள புத்தகங்கள் 3 மாதங்களுக்கொருமுறை புதிய புத்தகங்களால் மாற்றப்படும். இந்தக்காரியங்களுக்குப் புத்தகங்களை அடுக்க வசதியாகச் செய்யப்பட்ட மோட்டார் 2000 புத்தகங்களுடன் குறிப்பிட்ட காலப்படி இந்த கிராமங்களைச் சுற்றி வரும். அந்தந்த கிராமங்களுக்கு அந்த மோட்டார்கார் செல்லும் பொழுது அந்தந்த கிராம மக்கள் கார் நிற்கும் இடத்திற்குச்சென்று தேவையான புத்தகங்களைப் பெறுவதுடன் தங்களிடம் உள்ள புத்தகங்களில் படித்தவைகளைத் திருப்பிக் கொடுத்துவிடுவார்கள். அர்பன் ஜில்லாக்களில் சாசுவத கட்டிடங்கள் ஏற்படும் வரை இந்த மோட்டார்கார்களே புத்தகாலய வேலையைச் செய்துவரும்.

இதனால் தாங்கள் விரும்பும் புத்தகங்களை அடைய முடியவில்லையே என்று கவலைப்பட வேண்டியதில்லை. ஏனென்றால் இந்தப் புத்தகாலயங்களுக்குள் இருந்து வரும் தொடர்பால் எந்த புத்தகம் எங்கிருந்தாலும் தாமதமில்லாது பெறலாம். இந்தக் காரியத்திற்கென்று தனித்த அமைப்புகள் புத்தகாலயத்தாரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. அதாவது லண்டனில் உள்ள மத்திய புத்தகாலயமும், தனிப்பட்டவர்களின் நிர்வாகங்களில் உள்ள கலாசாலைப்புத்தக நிலையங்களும் தனித்த வேறு காரியங்களை கவனித்து வரும் சங்கங்களும் ஒருவரிடம் இல்லாத புத்தகங்களை தங்களுக்குள் ஒருவருக்கொருவர் தேவையான சமயங்களில் மாற்றிக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. உதாரணமாக ஒரு சாதாரண புத்தகாலயத்தில்வாசகர்களுக்குத்தேவையான புத்தகம் இல்லாதிருந்தால் அப்புத்தகத்திற்கு லண்டனில் உள்ள மத்திய புத்தகாலயத்திற்கு எழுதுவார்கள். அவர்கள் அப்புத்தகம் தங்கள் நாட்டில் யாரிடம் இருக்கிறதோ அவர்களைக்கேட்டு வாங்கி உதவுவார்கள். அப்படி அந்நாட்டில் யாரிடமும் இல்லையானால் வெளிநாடுகளிலும்வாங்கி உதவ வசதிகள் செய்துள்ளார்கள்.

கோவில் சொத்துக்கள்

(பி. சிதம்பரம் பிள்ளை, பி. ஏ, பி. எல்., எம். எல். ஏ.)

"பொதுக்கோவில்களைக் குறித்தும், அவற்றின் சொத்துக்களைக் குறித்துமுள்ள சரித்திரத்தையும், ஆதி அமைப்பையும் அறியாத குறையே இப்பொழுது சட்டத்தில் ஏற்பட்டுள்ள குழப்பத்திற்குக் காரணமாக இருக்கிறது" என்று தோழர் ஜே. ஸி. கோஷ் அவர்கள் எழுதுகிறார். இது, நமது வழக்கறிஞர்கள்—அதிலும் இந்து வழக்கறிஞர்கள் மீது சுமத்தப்படும் பெரும் பழியாகும். இதன் பொருள் என்னவென்றால், நமது வக்கீல்கள் பூரண அறியாமையில் மூழ்கிக்

அந்நாட்டில் எந்த மூலையில் இருந்தாலும் வரவழைத்துப் படிக்கக்கூடிய இரண்டு கோடி புத்தகங்கள் லண்டன் மத்திய புத்தகாலயத்தில் சேமித்து வைத்துள்ளார்கள். இவை தவிர அந்நாட்டில் வெளியிடப்படும் எந்த புத்தகத்திலும் சில புத்தகங்களை அந்நாட்டின் கண்காட்சி சாலைக்கும் சில புத்தக நிலையங்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று சட்டம் செய்துள்ளார்கள். அதன்படி ஏராளமான புத்தகங்கள் குவிந்துள்ளன. ஆனால் மேல் சொன்ன 2 கோடியில் இந்த புத்தகங்களின் எண்ணிக்கை சேர்க்கப்படவில்லை. மேற்படி கண்காட்சி சாலைகளில் உள்ள புத்தகங்களையும் அந்த இடத்திலேயே படிக்கலாம். ஆனால் வெளியில் எடுத்துச் செல்லமுடியாது.

ஆக பிரிட்டனில் உள்ள புத்தகங்களை (270 0000) இரண்டு கோடியே எழுபது லக்ஷங்கள் ஆகும். இவைகள் ஒரு வருடத்தில் வீட்டில் படிப்பதற்கு கொடுக்கப்பட்டுள்ளது. 21 கோடி நபர்களுக்கு என்று கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால் இதன் செலவு அந்நாட்டின் ஜனத்தொகைப்படி நபர் ஒன்றுக்கு 1 சில்லிங் 1 பென்ஸ் (ரூ 0—15—2) அல்லது கிட்டத்தட்ட 1 ரூபாய் மொ-ர்) தான் ஆகிறது.

கிடக்கின்றார்கள் என்பதுமன்றி, பொதுக்கோவில்களையும் அவற்றைச் சேர்ந்த தர்ம சொத்துக்களையும் பற்றி இவர்கள் அறிந்து அமுல் நடத்தும் சட்டமானது பெருங்குழப்பத்தின் காரணமாக ஏற்பட்டதென்பதுமாகும். ஆலயப் பிரவேசப் பிரச்சினையைப் பொறுத்தமட்டிலும் இது முற்றிலும் உண்மையே.

இந்து சமூகத்தைச் சேர்ந்த எவரையும், இந்துக் கோவிலுக்குள் போகவும், வணங்கவும் கூடாதெனத் தடுக்க, 'டிரஸ்டிகள்' (டிரஸ்டிகள் என்றழைப்பதே சட்டரீதியான பிழையாகும்) என்பவருக்கோ, தேவஸ்தானக் கமிட்டிகளுக்கோ, அல்லது சாதி இந்துக்கள் என்று சொல்லப்படுபவருக்கோ சட்டப்படி உரிமையில்லையென்பதை நிரூபிக்க முயல்வோம். மேலும், மதசம்பந்தமான அல்லது சமுதாய சம்பந்தமான அல்லது சரித்திர சம்பந்தமான காரணங்களைக் கொண்டும் இந்த நாசகாமான ஆலயப் பிரவேச மறுப்பு நியாயமானது தான் என்று சொல்லவும் முடியாது ஆனால், இந்த நிலையிலேயே சாதி இந்துக்கள் இன்னும் நிற்பார்களானால், இந்து மதத்திற்கும், இந்து சமூகத்திற்கும் இதுவரை ஏற்படாத கேடு உண்டாகுமென்பது திண்ணம். நியாயவிரோதமானதும், ஒழுக்கவீனமானதும், மதத்துரோகமானதும், இழிவானதும், சுயநலத்தை அடிப்படையாகக்கொண்ட அநீதியானதுமான இத்தடை இந்து மதத்தினுடையவும், இந்து சமுதாயத்தினுடையவும் நலனைக் கருதாதவர்களிடமிருந்தே புறப்பட முடியுமென்பதை வற்புறுத்த வேண்டியதில்லை. சுருங்கச் சொல்லுமிடத்து, இந்துக்கள் என்று சொல்லிக்கொண்டு எதையாவது சாக்குப் போக்காகக் காட்டித் தம்மைப்போன்ற சகோதர இந்துக்களை ஆலயத்தில் பிரவேசிக்கவும் வணங்கவும் விடாமல் தடுப்பவர் யாராயினும் அவர் இந்து மதத்திற்கும், சமூகத்திற்கும் துரோகிகள் ஆவார்கள்.

ஒரு பேர்பெற்ற இந்திய சட்டநிபுணர் அடியில் வருமாறு குறிப்பிடுகிறார்:—

"தற்பொழுதுள்ள பழக்க வழக்கங்களைப்பற்றிய சரித்திரத்திற்குரிய ஆதாரம் சந்தேகப்படத்தக்கதாகவும், நிச்சயமற்றதாகவும், உண்மைக்கு மாறானதாகவுமிருப்பதால் கூலி கொடுப்பவரே வேலை வாங்க வேண்டும் என்ற பொதுவான கொள்கையை அனுசரிப்பதே நலமெனத் தோற்றுகிறது.

ஆலய அதிகாரிகள் யார் யாரிடமிருந்தெல்லாம் பணம் பெறவோ, வசூலிக்கவோ செய்கின்றார்களோ அவரவர்களுக்கெல்லாம், ஒரு காசுங் கொடாதவர்களுக்கிருக்கும் உரிமையையாவது கொடுத்து அவர்களுடன் வணங்கும்படி அனுமதிக்க வேண்டும். சில வகுப்பினர் கோவிலுக்குக் கொடுத்துக் கொண்டும், செலவு செய்துகொண்டுமிருப்பதும், ஒரு செம்புக் காசுகூடக்கொடாத மற்றவர்கள் சகலஉரிமைகளையும் மேலாதாயங்களையும் அனுபவிப்பதும் பெரிய அநீதியான முறையென்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை. இந்த நியாயமானது உரிய காலத்தில் அங்கீகரிக்கப் படாவிட்டால், டிரஸ்டிகள் வருவாயில்லாது திண்டாடிக் கடைசியாக ஒப்புக் கொள்ளும் வரையிலும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் காணிக்கைகள் செலுத்த மறுக்க நேரிடுமென்றோ, அல்லது அவர்கள் இன்னும் ஒருபடி மேற்சென்று, அநியாயமாகவும், பொறாமை காரணமாகவும் தடுக்கப்பட்ட கோவில்களுக்குள் விரைந்தோடிப் புகுவார்களென்றோ எண்ண இடமிருக்கிறது''

கோவில் சம்பந்தமான சட்டவளர்ச்சியைக் கொஞ்சம் கூட ஆராய்வோம். இந்துக்கோவில்கள் வருவாயைக் கருதி ஸ்தாபிக்கப் பட்டவையென்றும், அவைகளிலிருந்து கிடைத்த லாபம் அரசனைச் சேர்ந்ததென்றும் சாணக்கியரிடத்திலிருந்து அறிந்தோம். இரண்டாவதாக, இன்றையதினம் இந்துக் கோவில்களிற் பார்ப்பனனைக் காண்பது எதிர்பாராத சம்பவத்தால் ஏற்பட்ட தென்பதையும் கண்டோம். கோவில் பார்ப்பானுக்காகக் கட்டப்பட்டதல்ல; அவன் கோவிலுக்குள் பிரவேசிப்பது அவனுக்கே சமூக இழிவை உண்டு பண்ணும். மேலும் அதனால் அரசனுக்கும் தேசத்துக்கும் ஆபத்துண்டாகும் "விக்கிரக ஆராதனையை மனு இலேசாகச் சுட்டுகிறார்; கோவிலுக்குள் நுழைந்து தொண்டு செய்யும் பார்ப்பனர்கள் இழிகுலத்தவர் என்பதையும் அவர் குறிப்பிடுகிறார்'' என்று ஸ்பென்ஸ் ஹார்டி என்ற மேனாட்டு வடமொழி ஆசிரியர் கூறுகிறார். இந்துக் கோவிலில் பிராமணருக்குப் போஜனமளிக்கும் வழக்கமில்லை; ஆனால் இந்துக் கோவிலிற் புகுந்து வழி படுவதால் சாதியை விட்டு நீக்கப்பட்ட பிராமணர்களை நடனமாதர் சங்கீதக்காரர்களுடன் சேர்த்து அவர்களுக்கும் போஜனமளித்து வந்தார்கள். சாணக்கியர் காலத்தில் கோவில்களில் பிராமணர்களுக்குப் போஜனமளித்ததாகச் சொல்லப் படவேயில்லை; அங்ஙனம் நடந்திருக்கவு மாட்டாது; ஏனெனில் அது அரசனது வரு

வாயைப் பாதிக்கும் இவ்விடத்தில் மற்றொரு விஷயத்தைக் கவனிப்போம்.

ஆலயத்திற்குள் வணங்கும் பொருட்டுச் சென்றதினால், பிராமணர்களை அக்காலத்தில் சாதியிலிருந்து நீக்கினார்கள்; ஆனால் இக் காலத்தில் அதே பிராமணர்கள் தாம் எந்தெந்த சாதியார் கோவிலுக்குள் பிரவேசிக்கலாம், எந்தெந்த சாதியார் பிரவேசிக்கக் கூடாது என்பதைப் பற்றிச் சட்டமியற்ற முன் வந்துவிட்டார்கள்! இவ்விஷயத்தில் பிராமணருடன் சூத்திரர்களான வேளாளர் முதலியோரும் ஒன்று சேர்கிறார்கள். தென்னிந்தியா முழுவதும், எந்தக் கோவிலுக்குள்ளும் இவ்விரு சமுதாயத்தார்க்கும் (கிழக்குக் கரை வேளாளரும் மேற்குக் கரை நாயர்களும் சமமானவர்) போக உரிமையுண்டென்று கருதப்படுகிறது. இதுமட்டுமல்ல; கோவிலுக்குள் யார் யார் போகலாம் யார் யார் போகக் கூடாதென்று நிர்ணயிக்கும் உரிமை தங்களுக்கிருப்பதாகவும் அவர்கள் கருதுவதாகத் தெரிகிறது.

எந்தக்கோவிலிலாவது ஒரு பிராமணன் புகுவதைக் கண்டால் ஒவ்வொரு இந்துவுக்கும் அதில் பிரவேசிக்க உரிமையுண்டு என்பதை சரித்திரம் ருசுப்பிப்பதாக ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். அதே போன்று, எக்கோவிலிலாவது ஒரு வேளாளனோ அல்லது மற்றொரு 'சற்சூத்திர'னோ புகக் கண்டால் அக்கோவிலுக்குள் வேறு யாருக்கும், இந்த வல்லாதவருக்குங்கூட, பிரவேசிக்கவும், வணங்கவும் உரிமையுண்டென்பதற்குத் தடையேயில்லை.

இந்துக்கோவிலுக்குள் ஒரு பிராமணன் நுழைவதை இன்று யாரும் தடை செய்யவில்லை; அதுபோலவே ஒரு தேவதாசியையோ, நடன மாதையோ, அல்லது தாசி மக்களையோ தடுப்பதுமில்லை. இத்தாசி மக்களை முன் காலத்தில் தாசிபுத்திரர்களென அழைத்து வந்தார்கள். இத்தாசி புத்திரர்கள் தாம் இக்காலத்து சூத்திரர்களாவார்கள். அது எவ்வாறாயினும், வேளாளர்கள் உள்பட சூத்திரர்களுக்கு ஆலயப்பிரவேச உரிமையுண்டு என்பதில் சந்தேகமில்லை.

தாசி புத்திரர்களையே சூத்திரர் என அழைத்தார்கள். என்று குறிப்பிடுவதை 'சூத்திரப் பெரியார்கள்' தர்க்கித்தாலும், இந்த 'தாசி மக்கள்' யார் என்பதையும், தென்னிந்திய

சமூகத்தில் அவர்கள் எந்நிலையிலிருக்கின்றார்களென்பதையும் கவனிப்போம்.

"முற்காலத்தில், கோவிற் பணிவிடை காரணமாகத் தாசிகளுக்கு சமுதாயத்தில் ஒரு உயரிய அந்தஸ்திருந்தது. ஆனால் பிற்காலத்தில் அவர்கள் விலைமாதராக மாறிவிட்ட படியால் சமுதாயத்திலும் கீழ் நிலை எய்தினார்கள். எல்லா தாசிகளும் பொட்டுக் கட்டப்படுவதில்லை. மிகச் சிலரே அவ்விதம் செய்கிறார்கள். பலர் தாமாக வேசித் தொழிலி லிறங்குகிறார்கள். ஆனால் பெரும்பாலானவர் கல்யாணஞ் செய்துகொண்டு குடும்ப ஸ்திரீகளாக வாழ்கின்றார்கள். ஆண்களிற் பலர் அந்த சாதியிலேயே கல்யாணஞ் செய்து கொண்டு நடனம், மேளவாத்தியம் இவற்றிற் பழகிப் பெண் களுக்குக் கற்பித்துக்கொண்டு, இத்தொழில்களை நடத்திக் கொண்டும் காலங் கடத்துகிறார்கள்; மற்றும் பலர் வேறு சாதிகளில் மணமுடித்து, வேறு தொழில்களைக் கைக் கொண்டு, தம் பிறப்பினால் ஏற்பட்ட குறையை மாற்ற முயல் வதோடு கவுரவமான சூத்திர சமுதாயத்தில் இரண்டறக் கலந் தும் விடுகிறார்கள்" என்று பேர்பெற்ற மேனாட்டு சரித்திராசி ரியர் ஒருவர் குறிப்பிடுகின்றார். இது மணிமேகலை காலத் திலேயே நடைபெற ஆரம்பித்துவிட்டது. (இக்காலத்து தேவதாசிகள், பரத்தையர் என இழிவாகக் கூறப்படுவோர் முற்காலத்து நம் முன்னோர்களால் நம் குடும்பங்களினின் றும் உயரிய நோக்கத்துடன் ஆலயத் தொண்டிற்காக விடப் பட்டவர்களின் சந்ததியார் என்பது சரித்திர மூலமும் வெளி யாகின்றது.)

பிராமணனது கொடிவழி அல்லது உற்பத்தி எவ்வாறு அவனது ரிஷிகளில் மறைந்து கிடக்கின்றதோ அதே போன்று வேளாளர்கள் அல்லது சூத்திரர்களது உற்பத்தியும் தேவ தாசியிடம் மறைந்து கிடக்கின்றது என்று சொன்னால், தமிழ் நாட்டார் வம்ச சரித்திரத்திற்கு எத்தகைய அவமானமும் ஏற்பட்டுவிடாது. வம்சத்தைப் பொறுத்த வரையில் பிராம ணன் எவ்வளவு 'சர்வதேசாபிமானி'யோ அவ்வளவு சூத்தி ரனும் 'சர்வதேசாபிமானி'தான். தமிழ்மகள் மணிமேகலை யைவிட ஒரு உயரிய பெண்மணி இந்நாட்டில் அவதரித்த தில்லை. தமிழ் நாட்டில் தாசி மக்கள் கவுரவ சூத்திரர்களா னார்கள்; அச்சூத்திரர்களே பின் தென்னாட்டுப் பார்ப்பன ராகத் திரிந்தார்கள்.

நீதிபதி ஸர். டி. சதாசிவ ஐயரவர்கள் பணகுடி ஆலய வழக்கில் அடியில் வருமாறு குறிப்பிட்டார்:—

"சூத்திரர்க்குள்ளும் மேல்சாதிக்காரர்களென்று கருதிக் கொள்ளுபவர்கள், சூத்திரன் கீழ் சாதிக்காரரைத் தீண்டுவதில்லை; அவ்வாறு தீண்டுவதால் மத ஆசாரப்படி தீட்டு ஏற்படுமென்பதில்லை யாயினும் தீண்டுவதில்லை. இந்தக் கேஸில் பிரதிவாதி தரப்பில் முதலாவது சாக்ஷி 'நான் சூத்திரன். வெள்ளாள சாதி; ஆனால் கீழ்சாதி வேள்ளாளர்களை நான் தீண்டுவதில்லை' என்று சொல்லுகிறார். இவ்விதம் தீண்டாதது மத சம்பந்தமான கொள்கையாலல்ல; ஆனால் தற்கால சாதிச் செருக்கினால் ஏற்பட்டதாகும். வகுப்பு உயர்வு வாழ்வு உணர்ச்சியைப் பெருமிதப்படுத்துவதினால் ஏற்படும் கொள்கையாகும். ஏற்கனவே யிருந்துவரும் சாதிபேத வுணர்ச்சிக்குப் பக்கபலமாக, சாதிகளுக்குள்ளேயே 'வகுப்பு' பேதவுணர்ச்சியானது சமீப காலத்தில் தோன்றியுள்ளது."

தாசிமக்களின் தந்தையரைக் குறிப்பிடுவது கஷ்டமாகவே முடியும். அதைக் குறித்து நாம் இங்கு விவாதிக்கப் போவதில்லை. ஆனால் அது (Cosmopolitan) 'சர்வதேசாபிமான'த் தன்மையுடையது என்பதை மட்டிலும் குறிப்பிடுவோம். ஆனால் இங்கு சட்ட சம்பந்தமான ஒரு விஷயத்தை மட்டும் கவனிப்பது அவசியமாகின்றது. எப்படி தாசிகளுக்குள் சொத்து வார்சுரிமை விஷயத்தில் தகப்பன் அந்தஸ்தைக் கவனியாது தாயின் அந்தஸ்தை மட்டும் கணக்கிடுகிறார்களோ அதேபோன்று மலையாளிகளுக்குள்ளும் தாயின் அந்தஸ்தை மட்டுமே கவனிப்பார்கள்.

ஆகவே, இதுகாறும் கூறியவற்றிலிருந்து பிராமணனோ, தாசியோ, கவுரவமான சூத்திரர் உள்ளிட்ட தாசி புத்திரரோ பிரவேசிக்கும் எந்தக் கோவிலிலும், ஒவ்வொரு இந்துவுக்கும்—எந்த சாதியைச் சேர்ந்த இந்துவுக்கும், தீண்டாதவராகவோ, தாழ்த்தப்பட்டவராகவோ, ஒதுக்கப்பட்டவராகவோ இருந்தாலும், இந்துவென அழைக்கப்படும் ஒவ்வொருவருக்கும், அரசாங்கத்தார் இந்துவென அங்கீகரிக்கும் ஒவ்வொருவருக்கும், பிரவேசிக்கவும், தரிசிக்கவும் உரிமையுண்டு என்பதற்கு சரித்திர பூர்வமாக ஏராளமான ஆதாரமிருக்கின்றதென்பதைக் கண்டோம்.

எழுதுவதில் தேர்ச்சிப் பெறுவது எப்படி?

(கல்வி ஆசிரியர்: ச மு பிள்ளை எழுதியது)

நாம் எல்லோரும் ஏதாவது எழுத விரும்புகிறோம். சிலர் நூல்களும், இன்னும் சிலர் பத்திரிகைகளுக்கும் எழுதப் பிரியப்படுகிறார்கள். ஆனால், எழுதுவதற்கு விஷயம் வேண்டும். விஷயம் இருந்தாலும், எழுதும் திறமை வேண்டும்.

நாம் நன்றாக ஆலோசித்துப்பார்த்தால் இவ்வுலக வியவகாரங்களில் முக்கால்வாசி இந்த எழுத்துக்களால் உண்டாகிறது என்று தெரியவரும். எழுத்துக்கள் என்றால் பேசும் சொற்களையும் குறிக்கும்.

வெளிப்பார்வைக்கு, நமக்குத் தெரிந்த சொற்களைச் சேர்த்து இலேசாக எழுதிவிடலாம் என்று தோன்றுகிறது. ஆனால் அனுபவத்தில் அதைப்போல் கடினமான கலைவேறு ஒன்றும் இல்லை என்று தெரியவரும். ஒரு சொல் தனியாக இருக்கும் போது அதன் பொருள் வெகு தெளிவாக இருக்கலாம். ஆனால், அது ஒரு வாக்கியத்தின் இடையே ஸ்தானம் பெற்றால், ஒரு ஆசாமகத்தையே குலைத்துவிடும் ஆற்றல் வாய்ந்ததாக அமையலாம்.

பாஷை, இப்போது இருப்பது போலில்லாமல் கெட்டியாகவும், சொற்களின் பொருள்கள் ஒரு பூட்டும் அதன் சாவியும் போலிருந்தால், உலகத்தின் சரித்திரமேவேறுவிதமாயிருக்கும். அதாவது பாஷையின் சேஷ்டையால் விளைந்த அல்லல்கள் இல்லாதிருந்திருக்கும்.

நேர் முறை

ஆகையால் எழுத விரும்பும் ஒவ்வொருவரும் சொற்கள் பயங்கர வஸ்துக்கள் என்பதை முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும். "நீ என்ன சொல்ல விரும்புகின்றாயோ, அதை ஆடம்பரமின்றி அப்படியே சொல்" என்பதுதான் ஆரம்ப அப்பியாசங்களின் மூலமந்திரம். அவன் எழுத்தின் பொரு

ளைப் பிறர் சந்தேகப்படாவண்ணம் எழுதவேண்டும். இரண்டும் இரண்டும் என்ன என்று கேட்டால் தயங்கி நாலு என்று சொல்பவனுக்கு எழுத்து உலகத்தில் இடமில்லை.

'நடை' என்று சொல்லுகிறார்களே, அந்த சங்கதியைப் பற்றி ஆரம்ப அப்பியாசி சிறிதேனும் நினைக்கக்கூடாது. ஏனென்றால் நடை வேறெங்கிருந்தும் தேடிக்கொண்டுவரும் பொருளில்லை. ஒருவனுக்காகப் பிறன் அதைச் சமைத்துக் கொடுக்க முடியாது. அது தானே வந்து சேரும். அவன் புத்தி கூர்மையைப் பொருத்தும், அவன் குணத்தைப் பொருத்தும் தன்மைகொண்டு அவனிடமே பிறக்கும். பேச்சின் நடையும் அப்படியே. ஆகையால், நன்றாக எப்படி எழுதுவது என்ற கேள்விக்குத் தகுந்தபதில் "தோன்றியபடி இயற்கையாக எழுது" என்பதே.

படிக்கும் முறை

ஆரம்பத்தில் எழுதுவதற்கு விஷயம் வேண்டுமென்று சொன்னேன். விஷயஞானம் ஏற்படுவதற்கு பெருவாரியாக நூல்களை வாசிக்கவேண்டும். நடை தானே ஏற்படுமாயின் அதற்கு நூலறிவு வேண்டு . இவ்விதமான அறிவு இயற்கையான ஒரு நடையை ஏற்படுத்திக்கொள்ள மிகவும் உதவுகிறது என்பது அநுபவசித்தம். ஒரு விஷயம் புத்தகங்களைப் படிக்கும் போது, அதை ஒரு கடனாக எண்ணிப்படிக்கக்கூடாது. எந்தப் புத்தகத்தைப் படிக்கும்போது பசி, தாகம் கூடத் தோன்றவில்லையோ அதைப் படிக்கவேண்டும். அப்போது தான் பலன் ஏற்படும். நூல்களில் எந்த விதமான நூல் என்ற பாகுபாடே வேண்டாம். எதானாலும் சரி; படிக்க வேண்டும். ஆனால்அதன் பொருளை நமதுள்ளத்தில் பதிய வைத்து நன்கு ஆராய வேண்டும்.

ஆனால் நடை சம்பந்தமாக ஒரு விஷயம் குறிப்பிடத் தக்கது. கூடிய மட்டிலும் எந்த ஆசிரியர்கள் பொது மக்களின் மனத்தை கவர்ந்திருக்கிறார்களோ, அவர்களின் நூலைப் பெருமிதமாக வாசிக்க வேண்டும். அப்போது தான், பொது மக்களுக்கு ருசியான நடை மனதில் பதியும். அதன் முக்கிய அம்சங்கள் நம் நடையிலும் ஏற்பட ஏதுவாகும். ஒரு மேதாவி அரிய விஷயங்களை எடுத்துரைக்கலாம். அது புத்திமான்களான சிலருக்கே புரியலாம். ஆனால் நாம் எழுதுவது

எல்லோருக்கும் தெரிய வேண்டுமென்பதே லட்சியம். ஆகை யால் முன்னதாகக் கூறப்பட்டவர்களின் நூல்களை நன்கு படிக்க வேண்டும்.

இயற்கைத் தேர்ச்சி.

எழுதுவதில் இயற்கைத் தேர்ச்சி வேண்டும். எல்லோருமே நன்றாக எழுதி விடலாம் என்று எண்ணுவது வெறும் பகற்கனவு. இந்தத் தேர்ச்சியை நாம் விட்ட குறை என்று சொல்லுவோம். ஒரு முட்டாளை ஒரு பெரிய கணித சாஸ்திரியாகச் செய்யலாம், பெரிய எஞ்சினீயராகச் செய்யலாம். ஆனால் அவனை ஓவியக்காரனாகச் செய்ய முடியாது. சங்கீத வித்வானாகச் செய்ய முடியாது. நல்ல எழுத்தாளனாகச் செய்ய முடியாது. இந்த வித்தையை அபிவிருத்தி செய்யலாம். வதைக்க முடியாது.

இயற்கையில் எழுதும் சக்தி பெற்றோர் எல்லோரும் நன்றாக எழுதுகிறார்கள் என்று கொள்ளக்கூடாது. அவர்களும் எழுத்தின் சக்தியை...ஒலியைக் கண்டு பிடிக்க வேண்டும். எழுத்திலே ஜீவன் தோன்றும்படி செய்ய வேண்டும்.

இலக்கியமாகக் கருதப்படும் எழுத்துக்கள் தன்னை மறந்து ஒரு ஆவேசத்தில் எழுதியவைகளாகும். இலக்கியம் என்பது இயற்கையான விஷயங்களை இயற்கையாக எழுதுவதேயாகும். இவ்வித எழுத்துக்களிலே உயிர் தோன்றும்.

நடைகள்.

நடைகளில் பல வகையுண்டு. ஒன்று நொண்டி நடை. இது என்ன நடை என்று உங்கள் மனதைக் கேட்டால் தெரியும். ஒரு சொல் இடந்தவறி விழுந்து விட்டால் ராகம் பாடும்போது ஒரு அபஸ்வரம் சேர்வது போலிருக்கும். நொண்டி நடையை அபஸ்வரம் கலந்த ராகத்திற்கு ஒப்பிடலாம். தேக்க நடை என்பது மற்றொரு நடை. இது பெரும்பாலும் பத்திரிகைகளிலும், சில நூல்களிலும் காணப்படும். இந்த நடையைக் கண்டவுடன், எழுதியவன் மட்டரகமான தேர்ச்சியுள்ளவனென்று உடனே சொல்லிவிடலாம். இதன் முக்கியாம்சங்களாவன:-உயிரற்ற அடை மொழிகளை அடிக்கடி உபயோகித்தல். நாம் கேட்டு அலுத்துப்போன தொ

டர் மொழிகள், வற்றியுலர்ந்த பழமொழிகள், அர்த்தமற்ற சொற்கள், வாக்கிய அமைப்பில் செயற்கை அழகு இவைகள் தாம்.

தடபுடல் நடை என்பது மற்றொன்று. இதன் பெயரிலிருந்தே இன்ன தன்மையது என்று கண்டுகொண்டிருக்கலாம். இதிலுள்ள சொற்கள் பெரிய மண்பானையை உடைப்பது போல பெரிய சப்தம் கொண்டவை. சொற்களுக்காகவே இவர்கள் நடை அமைக்கிறார்கள். சிலருக்கு இயற்கையாகவே தகுந்த சொல் விழுந்தாலும், அதை அடித்து நிகண்டையோ அகராதியையோ திருப்பி வேறு சொல்லைத் தேடுகின்றனர். இவர்கள் தங்கள் எழுத்துக்களின் பயனை வாசகர்கள் நிகண்டையோ, அகராதியையோ திருப்பும் சிரமத்திலிருந்து கணக்கிடுகின்றனர் போலும்!

இன்னும் சிலர் ஒரு அபூர்வமான சொல் கிடைத்தால், அதை வைத்து ஒரு பூம்பல்லக்கு ஜோடித்துவிடுகின்றனர்.

சிக்கல் நடை என்பது வேறொரு தினுசு. இதில் சொற்கள் எளிதாயிருந்தாலும், அதன் பிரயோகம் சுவர்க்கப்படத்தின் ஏற்றம் இறக்கம் போலிருந்து வாசிப்போரைத் தத்தளிக்கச் செய்யும். இவை போன்ற விபத்துக்களிலிருந்து எழுத விரும்புவோர் தப்பிக்கவேண்டும்.

எழுதும் முறை

எழுதுவதற்கு வேண்டிய சில முறைகளை இனிக் கூறுவோம். எழுத்து, செய்யுள் நடையினாலும் சரி, உரை நடையினாலும் சரி இலகுவா யிருக்கவேண்டும். ஏனென்றால், எழுதுவதின் நோக்கம் தானென்ன? சொல்ல விரும்பும் விஷயத்தைத் தெளிவாகவும், சுளுவாகவும் சொல்வதல்லவா? ஆகையால் ஒரு நல்ல கட்டுரையில், அநாவசியமான வார்த்தை ஒன்று கூடக் காணமுடியாது. இதற்கு நல்ல வழி என்னவென்றால் எல்லோருக்கும் தெரிந்த சிறு சொற்களை உபயோகிக்கவேண்டும். கூடிய மட்டிலும் விந்நியாசமான தொடர் மொழிகளை விலக்கவேண்டும்.

ஆபாசமான சொற்கள் ஒருபோதும் எழுத்தில் காணக்கூடாது. வாக்கியங்களின் முடிவுகள், முறிந்ததாகக் காணப்

படாமல் அந்தமாக இருக்கவேண்டும். ஒரே சொல்லைத் திரும்பத்திரும்ப எழுத அநேகர் காணுகின்றனர். ஒரு சொல் ஒரே விதமான பிரயோகத்தில் வந்தால், இதைத் திரும்ப அப்படியே எழுதுவதற்கு, நல்லாசிரியர்கள் ஒரு போதும் தயங்கியது கிடையாது. அந்த நூலையாவது எழுதாமல் விடுவரேயன்றி, அதற்காக அரைகுறைப் பொருளுடைய சொற்களைத் தேடியோ, வாக்கியத்தை மாற்றியமைக்கவோ செய்யமாட்டார்கள்.

எண்ணங்களின் வாகனம்.

இன்னும் சொற்கள் எண்ணங்களின் வாகனங்களே. இலக்கணம் சொற்களின் உபயோகத்தை ஒழுங்கு செய்கிறது, ஆகவே இலக்கணம் ஒரு சாதனமே யன்றி அதிகாரியல்ல. எழுதும்போது சில சமயங்களில் இந்த சாதனம் இடையூறாகத் தோன்றலாம். அப்போது இதற்கஞ்சி எழுத்தின்பத்தைக் கெடுக்கவேண்டியதில்லை. அவ்வப்போது உதாரணமாகக் கவிதைகளில், இன்பமான ஓசையே பிரதானமாகக் கருத வேண்டி வரும். அக்காலங்களில், இலக்கணம் இரையாக்கப் படவேண்டியதுதான். இலக்கணத்தை உபகரணமாகக் கொள்ளவேண்டும்; தொழக்கூடாது. இந்த சமயத்தில் இலக்கணத்தை மீறுதல் மன்னிக்கத் தகுந்ததே. இதனால் எழுத்துக்கு யாதொரு இழுக்கும் வராது.

முடிவாக, சொற்களின் செட்டும், கட்டும், தெளிவும், இயற்கை வழி எழுதலும், நன்மை; எழுத்துலகத்தில் முன்னணிக்குக் கொண்டுவரும் என்பதில் ஐயமில்லை.

பகுத்தறிவு வெளியீடுகள்.

—)○(—

தோழர் ஈ. வெ. ரா. எழுதியவை.

பெண் ஏன் அடிமையானாள்?	ரூ.	0 5 0
பிரகிருதிவாதம்	,,	0 3 0

அறிஞர் சார்ல்ஸ் T கோர்ஹாம் எழுதியது.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை ...	,,	0 5 0

Hon பேர்ட்டிரண்ட் ரசல் எழுதியவை.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல?	,,	0 3
மதம் மக்களுக்குச் செய்த நன்மையென்ன? ...	,,	0 3 0

அறிஞர் இங்கர்சால் எழுதியவை.

மதம் என்றால் என்ன?	,,	0 3 0
கடவுள்	,,	0 5 0
நான் சமூசபவாதியானதேன்?	,,	0 3 0
வால்ட்டேர்	,,	0 4 0
பேய்-பூதம்-பிசாசு	,,	0 3 0

அறிஞர் பிரமச்சாரி M. A., L. T., எழுதியவை.

மதமும் விஞ்ஞானமும்	,,	0 3 0
பிரபஞ்ச உற்பத்தி	,,	0 3 0

அறிஞர் ஜோஸப் மேக்கேபி எழுதியது.

மதப்புரட்டு	,,	0 4 0

தோழர் M. சிங்காரவேலு B. A., B. L., எழுதியவை.

மெய்ஞ்ஞான முறையும் மூடநம்பிக்கையும் 1-ம் பாகம்	0 6 0
ஷை 2-ம் பாகம்	0 5 0

அறிஞர் ஜீன் மேஸ்லியர் எழுதியவை.

பகுத்தறிவு or கத்தோலிக்க குருவின் மரணசாசனம்	0 4 0
ஷை 2-ம் பாகம்	0 4 0

தோழர் அ. இராகவன் எழுதியது.

பெண்ணுரிமையும், மதமும்	,,	0 3 0

அறிஞர் சிவானந்த சரஸ்வதி எழுதியது.

ஞானசூரியன் ("நான்காம் பதிப்பு") ...	,,	0 5 0
மரணத்திற்குப் பின் ஜீவனுண்டா? (ல. ப. நூ. பி.)		0 4 0

கிடைக்குமிடம்:—

மானேஜர். குடி அரசு ஆபீஸ், ஈரோடு.

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

1.	இந்தியாவின் குறைபாடுகள் (160 பக்கம்)	0	8	0
2.	லெனினும், மதமும்	0	4	0
3.	பொதுவுடமைத் தத்துவங்கள்	0	3	0
4.	கடவுளும், பிரபஞ்சமும்	0	4	0
5.	உழைப்பாளிகளுக்கு ஏன் இவ்வுலகமில்லை?	0	1	0
6.	இராமாயண ஆராய்ச்சி பாலகாண்டம்	0	4	0
7.	,, அயோத்தியா காண்டம் (200 பக்கம்)	0	8	0
8.	,, ஆரண்ய காண்டம்	0	4	0
9.	,, கிஷ்கிந்தா காண்டம்	0	4	0
10.	ஞானசூரியன் (நான்காம் பதிப்பு) 200 பக்கம்	0	5	0
11.	தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்	0	3	0
12.	மேயோ கூற்று மெய்யா? பொய்யா?	0	3	0
13.	பங்கஜம் அல்லது பார்ப்பனக் கொடுமை	0	4	0
14.	ஈ. வெ. ரா. சீர்திருத்த மகாநாட்டு உபந்யாசம்	0	2	0
15.	அகத்தியர் ஆராய்ச்சி	0	2	0
16.	இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு	0	2	0
17.	கதர் மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)	0	2	0
18.	பர்னார்ட்ஷா உபந்யாசம்	0	1	0
19.	சோஷியலிசம்	0	2	0
20.	போல்ஷ்விக் முறை	0	1	0
21.	ஈ. வெ. ரா. இலங்கை உபந்யாசம்	0	0	6
22.	சமதர்ம உபந்யாசம்	0	0	9
23.	சோதிட ஆராய்ச்சி	0	4	0
24.	மனுநீதி விளக்கம்	0	2	0
25.	மறுப்புக்கு மறுப்பு	0	3	0
26.	பாரத ஆராய்ச்சி (ஆதிபருவம்)	0	4	0
27.	புது ரஷ்யா (200 பக்கம்)	0	8	0
28.	புராண ஆராய்ச்சி தக்க ஆதாரங்களுடன்	0	3	0
29.	கர்ப்ப ஆட்சி	0	6	0
30.	ராவணப் பெரியார்	0	5	0
31.	இங்கர்சால் பொன்மொழிகள்	0	4	0
32.	நரகம் எங்கே?	0	2	0
33.	ஜாதியை ஒழிக்க வழி	0	4	0
34.	கலைக்கியானம் அல்லது கைவல்யம் கட்டுரை	0	5	0
35.	ஹிந்தி எதிர்ப்புப் பாடல்கள்	0	2	0
36.	காரல் மார்க்ஸ்	0	2	0
37.	மனிதன் என்றால் என்ன?	0	6	0

கிடைக்குமிடம்:— குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

Edited Printed and Published by E. V. Krishnasamy
at the Unmaivilakkam Press, Erode.